Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

(C7720)
Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 695 & Get Schol.



முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 10 வெள்ளிக்கிழமை (24.06.2011) பக்கங்கள் 16 ஓசை – 268




பொலிஸாருக்கு பதில் இராணுவம் ஏன்?

08




உலகின் வயதான பெண் மரணம்

13



தடுக்கி விழுந்த பேராசிரியர்

14



தனிநபர் வருமானம் அதிகரிப்பு

02

# அரசியல் தீர்வு விரைவாக வேண்டும்

## வலியுறுத்துகிறது ஈ.பி.டி.பி.



(கொழும்பு)

கூட்டமைப்பினரைச் சந்தித்த அரசு தரப்புக் குழுவினர் தொடர்ந்து ஈழமக்கள் ஜன நாயகக் கட்சிப் பிரதிநிதிகளைச் சந்தித்து தீர்வு தொடர்பாக உரையாடினர்.

அரச தரப்பில் அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, ஜீ.எல். பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரஜீவ விஜேசிங்க, சஜின்வாஸ் குணவர்தன ஆகியோர் பேச்சில்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வுக்கான பேச்சு அரசுடன் தொடரும்

## கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முகமாக அரச தரப்புடனான பேச்சுக்கள் தொடர்ந் தும் இடம்பெறும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தீர்வை எட்டுவதற்கான அரசு தரப்புடனான பேச்சுக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த அடிப்படை விடயங்கள் தொடர்பாக கூட்டமைப்பினால் ஏற்கனவே முன்

(15 ஆம் பக்கம் பார்க்க)



# குடிநீர் விநியோகம்; பிரான்ஸ் அரசு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் புதிய செயற்திட்டத்துக்காக பிரான்ஸ் அரசிடமிருந்து நிதியுதவி பெறப்படவிருக்கின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தவும் யாழ். மாநகரசபை எல்லைக்குள் சுகாதார வசதிகளை வழங்கவும் பிரான்ஸிடமிருந்து அடிப்படை உதவியாக 35 மில்லியன் யூரோக்களைப் பெற்றுக்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இதற்கான பிரேரணையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வைத்திருந்தார்.

அத்துடன் இரணைமடு நீர்த்தேக்க அபிவிருத்திப் பணிகளுக்காக 30 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டங்களுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 90 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் கடல் வளம்; யாழில் ஆய்வு மகாநாடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கடற்தொழில் சார் ஆய்வு மகாநாடு ஒன்று தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை (NARA) நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர் வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள பிள்ளையார் இன் ஹோட்டலில் காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

வங்காள விரிகுடா சூழல் தொகுதி மற்றும் அதன் மீன் வளங்களை வலய முகாமைத்துவம் ஒன்றின் ஊடாக மேம்படுத்தி அதன்மூலம் கரையோர மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் என்ற கருப்பொருளை உள்ளடக்கியதாகவே இக்கருத்தரங்கு அமையவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் கடற்தொழில்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# சீரற்ற மின்விநியோகம் யாழ்.குடா மக்கள் விசனம்

(குருநகர்)

குடாநாடு தழுவிய அளவில் இந்த வாரத்தில் மணித்தியாலயத்திற்கு ஒரு தடவை என்ற கணிப்பீட்டளவில் மின்சாரம் தடைப்பட்டு வருவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலைமை இரவு நேரம் என்றில்லாமல் பகலிலும் சகட்டுமேனிக்கு ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கிழமையில் ஒரு நாளாக ஆரம்பித்து இரண்டு, மூன்று நாட்கள் உயர் மின்னழுத்துப் பிரிவுகளில் திருத்தங்கள் செய்வதற்காக மின்சாரம் நிறுத்தப்படுகின்றது. எது எப்படியாயினும் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வட பகுதியில் மட்டுமே இத்த கைய மின்தடைகள் ஏற்பட்டுக் கொண்டிருப்பது சுட்டிக்காட்டத்தக்கது. (68)

# தன்னைத்தானே சுட்டு இயக்கச்சியில் சிப்பாய் பலி

(கிளிநொச்சி)

தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுக்கொண்ட சிப்பாய் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று இயக்கச்சிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இப் பகுதியில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 19 வயதுடைய வசந்த என்ற படைச் சிப்பாயே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

இவரது சடலத்தை பார்வையிட்ட கிளிநொச்சி மாவட்ட நீதிபதி பெ.சிவகுமார் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி இராணுவப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்.புகையிரத நிலையம் புனரமைப்பு பணிகள் விரைவில்

(கொழும்பு)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் புகையிரத நிலையம் 89 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதுடன் இந்நிதியை இலங்கை வங்கி வழங்கவுள்ளது.

இந்நிதியை வழங்குவது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கொழும்பு புகையிரத திணைக்களத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம, புகையிரத திணைக்கள அதிகாரிகள், இலங்கை வங்கி அதிகாரிகள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, 159 கிலோமீற்றர் நீளமான வடபகுதிக்கான புகையிரதப் பாதையில் 85 பாலங்கள், 16 உப புகையிரத நிலையங்கள் மூன்று கட்டங்களாக அமைக்கப்படவுள்ளன.

இதில் முதலாவது கட்டம் வவுனியாவில் இருந்து ஓமந்தை வரை நிறைவடைந்துள்ளது. ஓமந்தையில் இருந்து பளை வரை இரண்டாவது கட்டமாகவும் பளையில் இருந்து காங்கேசன்துறை வரை மூன்றாவது கட்டமாகவும் அமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**மாணவச் செல்வங்களே**

☞ உள்ளே கல்வி முரசு
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி I, பகுதி II இன் விடைகளும், கற்பித்தல செயற்பாடுகளும் இணைக்கப்பட்டுள்ளன.



'அளவெட்டியில் கூட்டத்தைக் குழப்பி எங்களுக்கு நல்ல பிரச்சாரத்தையும் அனுதாபத்தையும் பெற்றுத் தந்துட்டீங்க' என்று இன்பமாகக் கதைத்துக் கொள்கிறார்களோ!

# அதிகரிக்கிறது தனிநபர் வருமானம் வங்கிகள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்

## மத்திய வங்கியின் ஆளுநர் நிவாட் கப்ரால்



(வவுனியா)


கடந்த ஐந்து வருடகாலத்தில் எமது நாட்டில் தனிநபரின் வருமானம் இரண்டு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனை கூட்ட மேலும் அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் வங்கிகள் மக்களுடைய வாழ்க்கைக்கு பல விதத்திலும் உதவவுள்ளனர் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிரதேச அபிவிருத்தி வங்கியின் வவுனியா கிளைக் காரியாலயத்தை வைபவ ரீதியாக திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், 30 வருட போரின் பின்னர், தற்போது நாடு பல வழிகளிலும் அபிவிருத்தி கண்டு வருகின்றது. குறிப்பாக வடமாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு பல வெளிநாட்டு உதவிகள் கிடைத்துள்ளது.

வங்கியானது சகல துறையினருக்கும் பொருளாதார ரீதியாக கைகொடுத்து உதவியளிக்கக் காத்துள்ளது. வங்கிகளில் முதலீடுகளைச் செய்வதன் மூலம் மற்றவர்களுக்கு உதவவும் அத்துடன், நாட்டின் அபிவிருத்திக்கும் பயனுடையதாக அமையும் என்றார்.

# கைதடியில் கள்ள மாடு வெட்டியவர் நீதிமன்றில் செலுத்தினார் அபராதம்



(சாவகச்சேரி)

கைதடிப் பகுதியில் மாட்டைத் திருடி கொலை செய்த இருவருக்கு தலா 30 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கைதடிப் பகுதியில் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான மாட்டை, காணி ஒன்றுக்குள் புகுந்து களவாடிக் கொலை செய்தது தொடர்பாக ஆறு சந்தேக நபர்களுக்கு எதிராக நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

வழக்கை நீதிபதி விசாரணை செய்தபோது, 4ஆம், 5ஆம் சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இவர்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் ஆறு மாத கால சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது. (11)

# கூட்டம் பிற்போடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கு இன்று மறவன்புலோ சகலகலா வல்லி வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். இந்தக் கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (11)

# உபதபால் அதிபர்கள் நியமனம்

காரைநகர் வலந்தலை மற்றும் கோவளம் உப தபாலகங்களுக்கு புதிய உபதபால் அதிபர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

வலந்தலை உபதபாலகத்தில் கடமையாற்றியவர் ஒட்டுசுட்டான் தபாலகத்துக்கு தபால் அதிபராக பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளார். அவ்விடத்துக்கு கந்தையா பிள்ளை ஜெயந்தன் நியமனம் பெற்றுள்ளார்.

கோவளத்தில் உபதபால் அதிபராக கடமையாற்றியவர் முல்லைத்தீவு தபால் அதிபராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளதால் அவ்விடத்துக்கு அம்பிகாபதி ரம்மியாவும் நியமனம் பெற்றுள்ளனர்.

தபால்மா அதிபரால் நியமனம் செய்யப்பட்டுள்ள இவர்கள் பரீட்சை மூலம் முதல் தடவையாகத் தோற்றி முதல் நியமனம் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (50)

# யாழ்.கஸ்தூரியார் வீதி புனரமைக்க கோரிக்கை

(குருநகர்)

யாழ்.நகர மற்றும் புறநகர்ப் பகுதிகளில் அமைந்துள்ள அனேக வீதிகள் சேதமடைவதும், திருத்தப்படுவதும் இயல்பாக நடந்து வருகின்ற ஒன்றாகவே அமைகிறது.

ஆயினும், கஸ்தூரியார் வீதியில், யாழ்.இந்துக் கல்லூரி-விளையாட்டு மைதானத்தை அண்டியுள்ள இந்து சிறுவர் பாடசாலை எதிரில் இருக்கும் வீதி, போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது.

குண்டும், குழியும் என்று வர்ணனை செய்யும் பாங்கில் கூறினாலும், அவற்றில் வெளிக்கிளம்பிக் கிடக்கும் கற்களால் ஏற்படக்கூடிய நஷ்டங்கள் கூறிமாளாது.

இதனைப் பற்றி பல தடவை பத்திரிகைச் செய்திகள் மூலமும், சம்பந்தப்பட்டவர்களுக்கு புகார்கள் அனுப்பியும் இதுவரை எதுவித பயனும் ஏற்படவில்லை என பொதுமக்கள் மத்தியில் குறை கூறப்படுவதுடன், நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடப்படுகின்றது.

# பூம்புகாரில் தபாற்கந்தோர் புதிய கட்டடத்துக்கு அடிக்கல்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் அரியாலை கிழக்கு பூம்புகார் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தபாற்கந்தோர் ஆகியன 2.47 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இவற்றுக்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த புதன்கிழமை பூம்புகார் பகுதியில் நடைபெற்றது.

இப்பகுதியில் மீள்குடியேறியுள்ள மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே இவை நிர்மாணிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.



இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில், நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளர் அ.ரவீந்திரதாசன் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில், மாதர் சங்கத் தலைவி அ.ரஞ்சனாதேவி, கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருநாவுக்கரசு, உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை, மேற்படி பகுதியில் பூம்புகார் அ.த.க. பாடசாலைக்கான கட்டடமும் ஏற்கனவே அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமானப் பணிகள் நடை பெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# வல்வை வைத்தியசாலைக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

வல்வையிலிருந்து புலம்பெயர்ந்த வெளிநாடுகளில் வாழ்கின்ற மக்களால், வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலைக்கு இயன் மருத்துவ உபகரணம், ஸ்கானர் மற்றும் இரத்தப் பரிசோதனை என்பவற்றுக்காக 30 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

# அனுமதியின்றி கள் விற்பனை இருவருக்கு தண்டம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

அனுமதியின்றி ஒன்றரைப் போத்தல்களுக்கு மேற்பட்ட கள் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இருவருக்கு யாழ். நீதிமன்றம் தலா 2 ஆயிரம் ரூபா குற்றப்பணம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

யாழ்.பொலிஸாரினாலும், கோப்பாய் பொலிஸாரினாலும் தாக்கல் செய்யப்பட்ட இவ்விரு வழக்குகளையும் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட யாழ்.மேலதிக நீதிபதி அ.பிரேமசங்கர் குற்றவாளிகள் இருவருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா குற்றப் பணமாகச் செலுத்த வேண்டும். இல்லையேல் இரண்டு மாதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்தார். (பா)

# ஆட்டோ சாரதி வெட்டிக் கொலை

(வவுனியா)

ஆட்டோ சாரதி ஒருவர் இனம் தெரியாதவர்களினால் நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்

வவுனியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கூமாங்குளம் அம்மன் கோவிலடியில் இந்தச் சம்பவம் நடை பெற்றுள்ளது என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவர் 31 வயதுடைய இராஜரட்ணம் விக்கிரம் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பொலிஸார் குறிப்பிட்டனர்

சடலம் மரணவிசாரணைக்காக வவுனியா. பொதுவைத்தியசாலை சவச்சாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது

இந்தச் சம்பவம் குறித்து எவரும் கைதாகவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (39)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு இனி வாய்ப்பு இல்லை

ஆசிரியர் சேவையில் எதிர்வரும் காலங்களில் தொண்டர் ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதில்லை என கல்வியமைச்சு தீர்மானித்துள்ளதாக பிரதிக் கல்வி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் பட்டதாரிகள் மூலமே நிரப்பப்படும். எவ்விதத்திலும் தொண்டர் ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படமாட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மாணவர் ஊக்குவிப்பு நிகழ்வு

(காரைநகர்)

காரைநகர் மத்தி மேம்பாட்டுக் கழகத்தினால் யா/யாழ்ரன் கல்லூரி மண்டபத்தில் இன்று கடந்த வருடம் 05 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் கழகத் தேர்வில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற 48 மாணவர்களுக்கான ஊக்குவிப்பு நிகழ்வு கழகத்தின் தலைவர் ந.கிருஷ்ணபவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

## அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்புக் கிராம உப அலுவலகத்திற்கு உட்பட்ட மாதகல் உப அலுவலகக் காணியின் எல்லைகள் நிர்ணயம் செய்யவேண்டியுள்ளதால், எல்லையின் அருகேயுள்ள காணி உரிமையாளர்கள் ஒரு வாரத்தினுள் தங்களது காணியை உறுதிப்படுத்தும் நில அளவு வரைபடம் மற்றும் உறுதி என்பவற்றுடன் பண்டத்தரிப்புக் கிராம உப அலுவலகத்தில் தமது எல்லைகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆதன விபரம்**

05ஆம் வட்டாரம், மாதகல் வீதியில் அமைந்துள்ள 125ஆம் இலக்க இவ் ஆதனத்தை வலி.தென்மேற்கு பிரதேசசபை உரிமை கோருகின்றது.

**ஆதனத்தின் எல்லை விபரம்**

கிழக்கு - பிரதான வீதி
வடக்கு - துரைராசா ரவி (சீவரத்தினம்)
மேற்கு - கந்தையா மாஸ்ரர் (கந்தையா விஜயநாதனும், ஆறுமுகராசா சத்தியபாமாவும்)
தெற்கு - ஒழுங்கை

**திருமதி புஸ்பமலர் சிவலிங்கம்,**
**செயலாளர்,**
**வலி.தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(C/540)

தோல்விகளைப்பற்றிக்கவலைப்படாதீர்கள் இலட்சியத்திலிருந்து ஆயிரம் தடவை வழுக்கிவிழுந்தாலும், இலட்சியத்துக்கு உழைப்பதில் பிழைகள் நேர்ந்தாலும் திரும்பத்திரும்ப அந்த இலட்சியத்தைப் பிடித்துக்கொள்ளுங்கள். இலட்சியத்தை அடைய ஆயிரம் தடவை முயலுங்கள் ஆயிரம் தடவை தவறினாலும் மேலுமொரு முறை முயலுங்கள் முயற்சியைக் கைவிடாதீர்கள்.

- அறிஞன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## அரசியலில் இதெல்லாம் சகஜம்!

"ஒரு சராசரி தமிழனின் உள்மனத்தை ஆராய்ந்தால் அவனால், தான் ஏற்றுக்கொள்வதை வழிபடாமலிக்க முடியாது என்று தோன்றுகின்றது. அவன் வழிபட ஒரு காட்சிப் பழமம் வேண்டும். அவன் கட்சித் தலைவனாக இருக்கலாம், ஜாதித் தலைவனாக இருக்கலாம், மதத் தலைவனாக இருக்கலாம், திரைப்படக் கதாநாயகனாகவும் இருக்கலாம். காலில் விழுவதற்குச் சௌகரியமாக அவன் கண்ணுக்குப் பாதங்கள் தெரிந்தாக வேண்டும். பாதுகா பட்டாபிஷேகம் தானே நம் கலாசாரம்?"

மேற்கண்டவாறு எழுதியிருப்பது பிரபல எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி அவர்கள். யாரோ ஒரு வல்லானைப் பின்தொடரும் சமூக மனநிலையானது, பெருமளவுக்குத் தமிழகத்திலிருந்துதான் நமக்கும் தொற்றிக்கொண்டிருக்க வேண்டும்.

மறுவளமாக, தலைவர்களுக்கும் மொழியையோ இனத்தையோ சொல்லித் தங்களை ஏகப்பிரதிநிதிகளாக்கிக் கொள்வதிலேயே போதை இருந்துகொண்டிருக்கிறது. ஏதோவொரு வாய்க்காலில் வீழ்த்தி அனைத்து மக்களையும் மந்தைகளாக மிதத்தி இழுத்துச் செல்வதிலேயே அவர்கள் குறி இருக்கிறது.

தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் "உலகத் தமிழர்களின் தலைவர்" என்கிற ஆசை அல்லது கனவு இதற்கு நல்ல உதாரணம். ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உலகத் தமிழர்களின் ஏகத் தலைவர் தான்தான் என அங்கீகரிக்கப்பட வேண்டும் என எப்போதும் விரும்பியவர் அவர்.

2010இல் செம்மொழி மாநாட்டை நடத்தியதே உலகத் தமிழர்களெல்லாம் வந்து, "உலகத் தமிழரின் தலைவர் கருணாநிதிதான்" என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தினால்தான். தமிழ் மொழி மீதும் தமிழர்கள் மீதும் பாசம் பொங்க எப்போதும் எழுதியும் பேசியும் தனது அந்தரங்க விருப்பத்தை வெளிப்படுத்தியே வந்திருக்கிறார். இதற்கெனவே காவலன், தமிழன், தலைவன், மீட்பர் என எண்ணற்ற அடைமொழிகளையும் தனக்குச் சூட்டி மகிழ்ந்திருக்கிறார்.

புலிகளுடன் கருணாநிதிக்கு மனத்தாங்கல் வந்ததற்கு, பிரபாகரன் உலகத் தமிழர்களின் தலைவராக வர்ணிக்கப்பட்டதும் ஒரு காரணம் என ஜெயகாந்தன் ஒருசமயம் கூறியிருந்தார்.

இப்போது பிரபாகரன் இல்லையென்றபோதும் கூட, கருணாநிதியால் தமிழச்சியே இல்லை என்று வசைபாடப்பட்ட ஜெயலலிதாவிடம் தனது உலகத் தமிழ்த் தலைவர் பதவியை இழந்திருப்பதுதான் துரதிஷ்டமானது.

இலங்கைக்கு எதிரான பொருளாதாரத் தடை தீர்மானத்திற்குப் பிறகு, நாம் தமிழர் இயக்கம், பெரியார் திராவிடக் கழகம் என்பனவெல்லாம் ஜெயலிதாவைத் தமிழ்த் தலைவி எனப் போற்றிப் புகழ்பாட ஆரம்பித்திருக்கின்றன. தீவிரத் தமிழ்மானத் தமிழர்களின் பாராட்டுக் கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றவண்ணம் உள்ளன.

அதுமட்டுமல்ல, "கருணாநிதியின் தமிழருக்கு எதிரான போக்கினை வெளிப்படுத்தியமைக்காக 'உண்மையான தமிழச்சிக்கு' வாழ்த்துகிறோம் என தமிழ்நாடு மீனவர் கூட்டமைப்புக் கூறியிருக்கிறது.

'கைபர் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் வந்த ஆரியப் பாப்பாத்தி' எனத் திராவிடத் தமிழர்களால் தமிழச்சியே அல்ல என்று வசைபாடப்பட்ட ஜெயலலிதா, இவ்விதமாக இன்று உலகத் தமிழர்களின் தமிழன்னையாக உருக்கொள்ளும், மொழியரசியலின் விநோதத்தைக் காண்கிறோம்.

தமிழவன் போன்ற திராவிட ஆராய்ச்சிப் பேராசிரியர்களெல்லாம், 'தமிழன் என்கிற மூலப்பழம உணர்வுக்குள் வர முடியாதவர் என்றெழுதிய ஜெயலலிதா, இன்று வீரத் தமிழச்சியாகிவிட்டார்.

வெறும் அரசியலில் மட்டுமல்ல, தமிழ் மொழியரசியலிலும் இதெல்லாம் சகஜம் என்றுதான் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

- ஆசிரியர்

# மீள்குடியேறிய பகுதிகளில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு 461 மில்லியன் ஒதுக்கீடு

(கட்டுவன்)

வலிவடக்கு தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட 14 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் மக்களுக்குத் தேவையான வீடுகள் அமைப்பதற்கு 461.92மில்லியன்ரூபாவை தெல்லிப்பளைப்பிரதேச செயலகம் ஒதுக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிதி ஒதுக்கீட்டில் 1307 நிரத்தர வீடுகள் அமைப்பதற்கு 424.80 மில்லியன்ரூபாவும், 255 தற்காலிக குடிசைகள் அமைப்பதற்கு 28மில்லியன் ரூபாவும், 73 வீடுகளை புனரமைப்பச் செய்வதற்கு 9.12 மில்லியன்ரூபாவும் செலவு செய்யப்படவுள்ளது.

ஜே/221 இளவலை வடக்கு, ஜே/222 இளவாலை வடமேற்கு, ஜே/223வித்தகபுரம், ஜே/225 கொல்லங்கலட்டி, ஜே/226 நகுலேஸ்வரம், ஜே/228 தெல்லிப்பளை ஜே/230 தந்தை செல்வாபுரம், ஜே/231 மாவிட்டபுரம் ஜே/232 மாவிட்டபுரம் தெற்கு ஜே/236 பழைவீமன்காமம் தெற்கு, ஜே/241 வறுத்தலை விளான், ஜே/243 குரும்பசிட்டி கிழக்கு, ஜே/245 வசாவிளான் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவிலேயே வீடுகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (22)

## ஒரு இலட்சம் பனைவிதை நடுகைத்திட்டம்

(முரசு மோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் ஒருஇலட்சம் பனம்விதைகள் நாட்டப்படவுள்ளதாக பனை அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.

கரைச்சி, கண்டாவளை பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இந்தப்பனம் விதைகள் நாட்டப்படவுள்ளன. கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக பனம் விதை நடுகைக்குரிய இடங்கள் தெரிவு செய்யப்பட்டு இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் இதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (110)

## பொதுநோக்கு மண்டபம் திறந்து வைக்கப்பட்டது

(கிளிநொச்சி)

கடந்த கால போரினால் முற்றாகச் சேதமடைந்திருந்த கிளிநொச்சி செல்வாநகரிலிருந்த பொதுநோக்கு மண்டபம் புனரமைக்கப்பட்டு மீளத்திறக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித்திட்டத்தினூடாக புனரமைக்கப்பட்ட இந்த மண்டபத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சமூகப் பொருளாதார அமைச்சின் பால்நிலை சமத்துவ அதிகாரி திருமதி கல்யாணி சமரசிங்க மீள் எழுச்சித்திட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர் ராஜசுவேந்திரன், வடமாகாண சபையின் பிரதி பிரதம செயலாளர் இராசநாயகம், கிளிநொச்சி மாவட்ட உதவித்திட்டப் பணிப்பாளர் கௌரிதாசன் மற்றும் கிராமமட்ட அமைப்புகளின் பிரதி நிதிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## பெரும்பான்மையின உத்தியோகத்தர் யாழில் நிர்வாக சேவைப் பயிற்சி

இலங்கை நிர்வாக சேவைக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 150 பெரும்பான்மை இன உத்தியோகத்தர்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளினூடாக மொழி மற்றும் கலாசார ரீதியில் பயிற்சிபெறும் நோக்கில் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமக்கென குறித்து ஒதுக்கப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளிலே பயிற்சி பெறும் அதே வேளை அப்பிரிவிலுள்ள சிங்கள மொழி சற்றும் தெரியாத ஒரு தமிழ் குடும்பத்துடனேயே தமது பயிற்சிக்காலத்தின் போது தங்கவேண்டும் என்பதுடன் இதற்கான ஏற்பாடுகளை கிராம சேவையாளர்களுடன் இணைந்து பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் மேற்கொண்டு வருகின்றனர். எதிர்வரும் ஜுலை மூன்றாம்திகதியிலிருந்து இவர்கள் தமது பயிற்சியினை ஆரம் பிக்கவுள்ளனர். இது ஒரு மாதகாலப் பயிற்சி என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் எட்டுப்பெண்களும், சங்கானைப் பிரதேச செயலர்பிரிவில் 5 ஆண்களும், 5 பெண்களும் பயிற்சிபெறவுள்ளனர். (86)

## கஞ்சா வைத்திருந்தவருக்கு விளக்க மறியல் உத்தரவு

(முரசுமோட்டை)

பச்சிலைப்பள்ளி பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதியில் கஞ்சா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டவரை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிபதி பி. சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

தர்மக்கேணி பளையைச்சேர்ந்த நபர் ஒருவர் 145 கிராம கஞ்சா போதைப் பொருளுடன் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார்.

இந்த வழக்கை கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணை செய்த நீதிபதி சந்தேக நபரை எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (110)

## இன்று முதல் வீதியோரங்களில் நிறுத்தப்படும் வாகனங்களுக்குத் தண்டம் விதிக்கப்படும்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி சந்தைப்பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வீதியோரங்களில் நிறுத்தி வைக்கப்படும் துவிச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை இன்று முதல் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டப்பணம் அறவிடப்படவுள்ளதாக நல்லூர் பிரதேசசபையினர் அறிவித்துள்ளனர்.

இவற்றினை நிறுத்தி வைப்பதற்கென் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் சிலரால் பாதுகாப்பு நிலையத்தில் விடப்படாத வீதியோரங்களில் போக்குவரத்துக்கு இடையூறாக இவை நிறுத்தி வைக்கப்படுகின்றன.

போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்திவைக்கப்படும் துவிச்சக்கரவண்டிகள் மோட்டார் சைக்கிள்களை அகற்றுவதுடன் சம்பந்தப்பட்டோர் மீது தண்டப்பணம் விதிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபையினர் மேலும் அறிவித்துள்ளனர். (கா)

## வலி.கிழக்கில் முன்னறிவிப்பின்றி மின்வெட்டு, பாவனையாளர் பாதிப்பு

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்கு பிரதேசத்தின் பல பகுதிகளிலும் முன்னறிவித்தல்கள் எவையுமின்றி அடிக்கடி மின்வெட்டு இடம்பெற்றுவருவதால் ஆவரங்கால் புத்தூர், அச்சுவேலி போன்ற பிரதேசங்களில் உள்ள மின்பாவனையாளர்கள் பெரிதும் பாதிப்படைவதாகப் பொதுமக்கள் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வார இறுதி நாட்களாகிய சனி மற்றும் ஞாயிறு தினங்களில் சில சந்தர்ப்பங்களில் முன்அறிவித்தல்கள் எவையுமின்றி மின்வெட்டு இடம்பெறுவதால் மின்பாவனையாளர்கள் பலரும் தமது அன்றாட கருமங்கள் பலவற்றைக்கூட மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் இப்பிரதேசங்களில் பகல்வேலைகளில் அடிக்கடி வலுக்குறைவான மின் விநியோகம் இடம்பெறுவதால் பாடசாலைகளில் கணினிச் செயற்பாடுகள் மற்றும் கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைவதாகவும் இதனால் மின்சாரசபைக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பிரச்சினையினை தெரியப்படுத்தவேண்டிய தேவை அடிக்கடி ஏற்படுவதாகவும் பலரும் தெரிவிக்கின்றனர். (03)

# இளையோரை சமூகப் பணியில் வளர்க்க பெரியோர்கள் முன்வரவேண்டும்

## ஓய்வுபெற்ற வலயக் கல்விப்பணிப்பாளர்

(அச்சுவேலி)

ஒவ்வொரு கிராமங்களிலிருந்தும் துடிப்பான இளைஞர், யுவதிகளைத் தெரிவுசெய்து அவர்களை நல்லொழுக்கமிக்க ஆசார சீலர்களாகவும், நல்ல பண்பாளர்களாகவும், தலைமைத்துவம் மிக்கவர்களாகவும் வளர்த்தெடுத்து சமூகப்பணிகளில் ஈடுபடுத்துவதற்கு ஆலயங்கள் முன்வரவேண்டும். இப்பணிக்கு ஊர்ப்பெரியவர்கள் என்றும் உந்துசக்தியாக திகழவேண்டும். இதன் மூலம் அகிலமெங்கும் சமாதானமும், அன்பும்,கருணை மனப்பாங்கும் நிலைபெறச் செய்யமுடியும் என்று ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோயிலில் இடம்பெற்ற சி.சிவலிங்கம் ஆசிரியர் தம்பதியினரின் பக்திப் பாமாலை இறுவட்டு வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு வெளியீட்டுரை வழங்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இன்று எமது பிரதேசங்களில் கலாசார விழுமியங்கள் சரிவரப் பேணப்படாத நிலைகள் காணப்படுகின்றன. இது இன்றைய இளம் சமூகத்தவர்களையும், தவறான பாதைக்கு இட்டுச் சென்றுவிடும். இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து நாம் மீண்டெழ வேண்டுமெனில் இளம்பராயத்தினருக்கு சமய விழுமியங்களும் ஒழுங்க ஆசாரங்களும் முறையாக கற்பிக்கப்படவேண்டும். இதில் ஆலயங்கள் முன்னின்று உழைக்க வேண்டியது கட்டாயமானதொன்றாகும்.

எத்தகைய கலாசார மாற்றங்கள் எமது பிரதேசங்களுக்குள் நுழைந்துகொண்டாலும் ஆலய மரபுகளையும், கலாசாரத்தையும் மதிக்கின்ற மக்கள் சமூகத்தவர்கள் தொகை கிராமப்புறங்களில்தான் உயர்வாகக் காணப்படுகின்றது.



ஆகவேதான் கிராமங்களில் மேற்கொள்ளப்படும் நற்செயல்கள் நகரங்களுக்கும் ஏனைய பிரதேசங்களுக்கும் இலகுவாக பரவிச் செல்கின்றன. இதனால் தான் கிராமங்களில் இன்று வரைக்கும் ஆலயங்களும் வழிபாட்டு முறைமைகளும் தொன்மைமிக்க வையாகவும் புனிதத்துவமானவையாகவும் காணப்படுகின்றன என்றார். (03)

# வறுமைக்குட்பட்ட குடும்பத்திற்கு இராணுவத்தினர் வீடு அமைப்பு



(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் வறுமைக்குட்பட்ட குடும்பங்களுக்கு இராணுவத்தினர் எட்டு இலட்சம் ரூபா செலவில் வீடு அமைத்து வருவதுடன், விவசாய செய்கையாளர் ஒருவருக்கும் உதவிகளை மேற்கொண்டுள்ளனர்.

இராணுவத்தின் 523ஆவது பிரிவினர் நுணாவிலில் உள்ள வறிய குடும்பம் ஒன்றுக்கு மின்சாரம் உள்ளிட்ட சகல வசதிகளும் கொண்ட வீடு ஒன்றினை எட்டு இலட்சம் ரூபா செலவில் அமைத்துவருகின்றனர். சுமார் ஆறு இலட்ச ரூபா செலவுக்குரிய நிர்மாணிப்பு வேலைகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இராணுவ பொறியியல் பிரிவினரால் அமைக்கப்பட்டுவரும் இவ்வீடு பூர்த்தியடைந்ததும் ஆகஸ்ட் மாதம் உரியவரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை கைதடி மேற்கு கல்லாக்கத்தில் வசிக்கும் க.குமாரசாமி என்ற வறிய நிலையில் உள்ள விவசாயி ஒருவருக்கு விவசாயச் செய்கைக்கான அவரது இரண்டு பரப்புக் காணி முழுமையாக துப்புரவு செய்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் இலவசமாக விதைபொருட்கள், பசளைகள், நீர் இறைப்பதற்குரிய எரிபொருள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளது. 523 ஆவது பிரிகேட் ஏழாவது விஜயபாகு ஏ.பிரிவினர் இவ்வுதவியை புரிந்துள்ளனர்.

இவரது காணியில் தற்போது பழப்பயிர்கள் மற்றும் கத்தரி, தக்காளி உள்ளிட்ட மரக்கறி வகைகளும் பயிரிடப்பட்டுள்ளன. (கா)

## முதலுதவிப் பயிற்சி

(அச்சுவேலி)

அகில இலங்கை முதலுதவிச் சங்கத்தினரால் ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் முதலுதவி சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், எதிர்வரும் 30.06.2011 வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அது தொடர்பான விசேட பயிற்சி வகுப்பு ஒன்று ஆவரங்கால் ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்தில் நடாத்தப்படவுள்ளது.

மேற்படி பாடசாலையின் அதிபர் திரு.குழந்தைவேலு ரவிச்சந்திரன் தலைமையில், நடைபெறும் இப்பயிற்சி வகுப்பில், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் பங்குபற்றவுள்ளனர்.

இதேவேளை பாடசாலைகள் தோறும் மாணவர்களின் நலன் கருதி இச் சங்கத்தினரால் இப்பயிற்சி வகுப்புகள் நடாத்தபட்டு வருவதும் குறிப்பித்தக்கது. (03)



யாழ்.எயிட் நிறுவனம் வழங்கிய உதவிப் பொருட்களுடன் உடுவில் மண்ஸ் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களும், கிரீமலை நகுலேஸ்வரமகாவித்தியாலய மாணவர்களும் விருந்தினர்களுடன் காணப்படுகிறார்கள்.

# சின்னஞ் சிறு செய்திகள்

## புதியநிர்வாகிகள்

(கரணவாய்)

நெல்லியடி வர்த்தகர் சங்க புதிய நிர்வாகத்தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதில் தலைவராக சி.அகிலன், செயலாளராக வி.எம்.பத்மநாதன், பொருளாளராக த.பிரேமகுமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டதுடன், நிர்வாக சபை உறுப்பினர்களாக ஐந்துபேர் தெரிவாகி உள்ளனர். (18)

## முதலுதவிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதிக்கான இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினரது முதலுதவிப்பயிற்சி வகுப்புக்கள் நாளை சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்களில் நடைபெறவுள்ளதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பயிற்சி வகுப்புகளில் சுமார் 30 வரையான மாணவர்கள் பங்குபற்ற முடியும். இப்பயிற்சி வகுப்பில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மருதங்கேணி பிரிவுத்தலைவர் ஸ்ரனிஸ்லோவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (பா)

## வீதிபுனரமைப்பு

(பூநகரி)

பூநகரி - சங்குப்பிட்டி வீதியிலிருந்து குறுக்கே கௌதாரி முனை வரை செல்லும் வீதியில் ஒருபகுதி புனரமைக்கப்பட்டுள்ளது.

கௌதாரிமுனையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு மண் ஏற்றிச் செல்லும் ஒப்பந்ததாரர்கள் அனைவரும் ஒன்றிணைந்தே இவ் வீதியின் ஒருபகுதியை புனரமைத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

சுமார் ஒன்பதரை இலட்சம் ரூபா செலவில் 8 கிலோமீற்றர் வரையிலான வீதியை புனரமைத்துள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். (112)

## அதிபர்கள் கூட்டம்

(யாழ்.நிருபர்

நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று நல்லூர் கோட்டக்கல்விப்பணிப்பாளர் சி.மாணிக்கராஜா தெரிவித்தார்.

அதிபர்கள் கூட்டத்திற்கு வருகைதரும்போது தரவுத்தரக் கோவையையும் கொண்டு வருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (10)

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்நிருபர்)

இந்திய கலாசார நிலையம் வீணை,புல்லாங்குழல்,மிருதங்கம், கர்நாடக வாய்ப்பாட்டு,இந்துஸ்தானிவாய்ப்பாட்டு,வயலின் தபேலா,பரதநாட்டியம் போன்ற கலைகளைக் கற்பிப்பதற்கு தகுதிவாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் பட்டதாரிகளாகவோ அல்லது அதற்கு இணையான தகைமை உடையர்வர்களாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் தமது சுயவிபரக்கோவை மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2011 ஜீலை 10 ஆம் திகதிக்கு முன்னதாக நிர்வாக இயக்குநர், இந்திய கலாசார நிலையம், 16/2, கிரகரிஸ் வீதி, கொழும்பு - 07 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். (10)

****

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் மொழிக் கற்கைத்துறையினர் வழங்கும் ஆங்கில மொழிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கைநெறியானது அடிப்படை ஆங்கில அறிவை விருத்தி செய்ய விரும்புபவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. அடிப்படை ஆங்கிலத்துக்கான சான்றிதழ் கற்கைநெறி, தொழில்சார் ஆங்கிலத்துக்கான கற்கைநெறி என இரண்டு கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கை திறந்த பல்கலைக் கழக பிராந்திய நிலையங்களில் 500 ரூபா செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011-07-04 ஆம் திகதிக்கு முன்னர் பிராந்திய அலுவல இணைப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். (10)

****

விவேகானந்தாசபை நடாத்தும் அகில இலங்கை சைவ சமய பாடப்பரீட்சை இவ்வாண்டு நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பாடசாலை மாணவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

பாடசாலைகள் விண்ணப்பங்களை சபையில் பெற்று விண்ணப்பிக்கலாம் என்றும். 2010 இல் பரீட்சைக்கு விண்ணப்பித்த சகல பாடசாலைகளுக்கும் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு விவேகானந்த சபை அறிவித்துள்ளது. (10)

# அஞ்சல் மூலவாக்குகளுக்கு தகுதிபெற்றோருக்கு அறிவிப்பு

(அச்சுவேலி)

சட்ட நடவடிக்கைகள் காரணமாக வாக்கெடுப்புக்கள் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்கள், அடுத்தமாதம் 23ஆம் திகதி நடைபெறவுள்ளதால், அஞ்சல் மூல வாக்களிப்பிற்காக விண்ணப்பித்த அரச ஊழியர்களின் விண்ணப்பங்கள் யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரினால் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு அதுதொடர்பான பதில்கள் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் மூலம் வாக்களிப்பிற்காக விண்ணப்பித்த வாக்காளர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியானவர்களின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டமையினை உறுதிப்படுத்தி, உரிய அலுவலர்களுக்கு யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரின் பதில் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (03)



எல்.பி. பினான்ஸ் நிறுவனத்தின் 40 ஆவது ஆண்டு சேவையை ஒட்டியும் உலக சுற்றாடல் தினத்தைமுன்னிட்டும் பசுமை உலகிற்காக பயன்தரும் மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வில் வடமாகாண முகாமையாளர் எல். தவசீலன் தலைமையில், சாவகச்சேரி கிளை முகாமையாளர் ஜே.ஜே.றொஷன் மற்றும் ஊழியர்களாலும் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் மரக்கன்றுகள் நடப்படுவதைக் காணலாம்.

## ஆங்கில ஆசிரியர்களுக்கு விசேட செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு இம்மாதம் 25 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களின் வினைத்திறனை உறுதிப்படுத்தும் முகமாக புதிய கற்பித்தல் முறைமைகள் பற்றி வடமராட்சி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சுந்தரமூர்த்தி விசேட கவனம் செலுத்தவுள்ளனர் இச் செயலமர்வில் அனைதது ஆங்கில ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# நீர் விநியோகம் துண்டிப்பு அலைந்து திரியும் மக்கள்

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்குப் பகுதியில் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள பொது நீர்த்தொட்டிகளுக்கான நீர் விநி யோகம் துண்டிக்கப்பட்டிருப்பதால், பொதுமக்கள் பலரும் நன்னீருக்காக அலைந்து திரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் சபையினரால் நிலாவரைப் பகுதியிலிருந்து குழாய் மூலமாக இப் பொதுத் தொட்டிகளுக்கு நன்னர் விநியோகம் கடந்த சில வருடங்களாக மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும், தற்போது இத்தொட்டிகளுக்கான நீர்விநியோகம் துண்டிக்கப்பட்டமையால் இப்பகுதிகளிலுள்ள தொட்டிகளின் மூலம் குடிநீரைப் பெற்று வந்த பல குடும்பங்கள் தற்போது நிர்க்கதி நிலைக்கு ஆளாகியுள்ளன.

இதேவேளை மேற்படி பகுதியில் உள்ள குடியிருப்புப் பகுதிகளுக்கு குடிநீர் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கு கட்டணத்திற்கான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (03)

## உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வணிகபீட மாணவர் ஒன்றியத்தால் உயர்தர வகுப்பு வணிகவியல் கற்கும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நாளை, மற்றும் நாளை மறுதினம் 25 ஆம் 26 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளது. மாறிவரும் கல்விச் சூழலுக்கு ஏற்ப பரீட்சையில் எத்தகைய விடைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இதற்கேற்ப மாணவர்கள் எவ்வாறு விடையளித்தல் வேண்டும் என்பனவற்றை விளக்கும் முகமாக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் இவ் வருடம் உயர்தரப் பரீட்சையில் கலந்துகொள்ளும் வணிகவியல் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது. க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குரிய பொருளியல், வணிகக்கல்வி, கணக்கீடு ஆகிய பாடங்களுக்கு நடாத்தப்படவுள்ள இக் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் முகாமைக் கற்கைகள் வணிகபீடத் தலைவருடன் தொடர்புகொண்டு பெயர்களைப் பதிவு செய்யுமாறு ஒன்றியத்தின் செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

# தமிழ்மொழியின் உன்னதத்தை உணர ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும்

## கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர்

(யாழ். நிருபர்)

உலகில் உள்ள ஆறாயிரம் மொழிகளுள் ஆறு மொழிகளே செம்மொழிகள் என்ற உயர் தகுதிப்பாட்டிற்குரியவை. தமிழ், சமஸ்கிருதம், சீனம், கிரேக்கம், லத்தீன், கீபுறு ஆகிய ஆறு மொழிகளையே செம்மொழிகள் என்கிறோம்.

உயர் தனிச் செம்மொழியாகிய தமிழ்மொழிக்குச் சொந்தக்காரராக விளங்கும் நாம், அதன் உன்னதத்தை உணர்ந்து கொள்ள ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும். இதற்குப் பாடசாலை மட்டங்களில் இடம் பெறும் தமிழ்த்தின விழாக்கள் உதவுகின்றன.

இவ்வாறு மட்டுவில் வடக்கு கமலாஜினி வித்தியாலயத்தின் தமிழ்த்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் க.பேரினபநாதன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

எமது மாணவர்கள் தாய் மொழியாகத் தமிழைக் கொண்டிருந்தபோதிலும், அதில் பூரண தேர்ச்சியைப் பெற்றிருக்கிறார்களா எனக் கொள்ள முடியாதுள்ளது.

தற்போது மாணவர்களுள் பலர் எழுத்துப் பிழைகளை



வாக்கிய வழுக்களை ஏற்படுத்தி எழுதுகின்றனர். மொழி ரீதியாக மாணவர்கள் விடுகின்ற பிழைகளை மொழிப்பாடம் கற்பிக்கின்ற ஆசிரியர் மாத்திரமல்லாது, எல்லா ஆசிரியர்களும் கவனம் எடுத்துப் பிழைகள் ஏற்படாது வழிப்படுத்த வேண்டும்.

எமது கலாசாலையில் தமிழ்த்துறையில் சிறந்த விரிவுரையாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வழிப்படுத்தல்களை நீங்கள் மேற்கொள்வதற்கு நாங்கள் ஆவன செய்வதற்குத் தயாராக இருக்கிறோம் எனக் குறிப்பிட்டார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி கல்வி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சின்னத்துரை, சித்திரபாட ஆசிரிய ஆலோசகர் எஸ்.இராஜன் ஆகியோரும் உரையாற்றினர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (10)

# உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கு பாட முகாம் நடாத்துவதற்கு ஏற்பாடு

(யாழ். நிருபர்)

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து கல்விப்பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பாட முகாம் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் யூலை மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் சித்திரம் நடனபாட முகாம்களும், யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியில் சங்கீத பாட முகாமும், யாழ் மத்திய கல்லூரியில் நாடகமும் அரங்கியலும் பாட முகாமும் இடம்பெறும் என்று யாழ். வலயக் கல்வி அலுவலக அபிவிருத்திப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.இராசலிங்கம் அறிவித்துள்ளார். இந்த வாரம் நடைபெற ஏற்பாடாகியிருந்த இப் பாட முகாம் மாகாண மட்டப் பரீட்சைகள் இடம்பெறுவதால் பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

# டெங்கு ஒழிப்பு சிரமதானத்தில் தீவகக் கடற்படையினர்

(வேலணை)

டெங்கு ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு தீவக கடற்படையினர் சிரமதானப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

நேற்றையதினம் வேலணை பிரதேச செயலக சுற்றாடலில் துப்புரவாக்கல் பணிகளை மேற்கொண்டு, டெங்கு ஒழிப்பில் ஈடுபட்டனர். இதில் பிரதேச செயலக ஊழியர்களும் பங்குகொண்டனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் வேலணை பிரதேச வைத்தியசாலைக்குச் சென்று அங்கு துப்புரவுப் பணிகளை மேற்கொண்டனர்.

நாடு முழுவதும் கடந்த இருபதாம் திகதி முதல் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையின் ஓர் அங்கமாக தீவக கடற்படையினர் இந்நடவடிக்கையினை மேற்கொண்டனர். (32)

## வெள்ளி விருந்து

**நற்குணம்**

உண்மையில் பணத்தைவிட நற்குணந்தான் வாழ்க்கைக்கு அவசியமானது. நீ வெளிநாட்டுக்குச் செல்லலாம். அங்கேயும் உன்னுடைய நற்குணம்தான் உன்னைக் காப்பாற்றும்.

சுவிட்சர்லாந்து போன்று நாடுகளில் பணக்காரர் பலர் இருக்கின்றனர். அவர்களுக்கு நடப்பதென்ன? ஆயினும் அமெரிக்கா, சுவீடன் ஆகிய நாடுகளில் தற்கொலை செய்து கொள்பவர் எண்ணிக்கை மிக அதிகம். அவர்கள் ஏன் சாக வேண்டும். அவர்களிடம் பணம் அதிகமாக இருக்கிறது. ஆனால் மன அமைதி இல்லை.

மனஅமைதி என்பது பாரதத்தில் மட்டுந்தான் அதிகம். கடவுளைப்பற்றி நினைக்கும்போதுதான் மன அமைதிகிட்டுகிறது. மனஅமைதி உனக்குள்ளேயே இருக்கிறது. அதை நீ வளர்த்துக்கொள் வேண்டும். நீ நல்ல பண்பாட்டை வளர்த்துக் கொண்டால், செல்வம் உன்னைப் பின்தொடரும். தனலட்சுமி குருடல்ல. யார் நன்கு செல்வத்தைப் பயன்படுத்துகிறார்களோ நன்கு ஆராய்ந்து, அவர்களை வந்தடைவாள். மிக கவனத்துடன் ஆராய்வாள், கெட்ட வழியில் தனத்தைப் பயன்படுத்துபவர்களைக் கண்டு மனம் வருந்துவாள், தனலட்சுமி, லட்சுமி தேவியைக் கவலையுறச் செய்கிறாள். - பாபா

# மானிய அடிப்படையிலான வீட்டுத்திட்டக் கொடுப்பனவு

(யாழ்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மானிய அடிப்படையில் 200 வீடுகள் அமைக்க மீள் குடியேற்ற அமைச்சு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

மீளக்குடியமர்ந்துள்ளவர்களுள் வீடழிந்தவர்களுக்கே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன்படி ஒவ்வொரு வீட்டுக்கும் மூன்று இலட்சம் ரூபா வழங்கப்படும் என்றும், இதில் ஒரு இலட்சம் ரூபா பயனாளிகளுக்கு மானியமாக வழங்கப்படும்.

அதேவேளை, மிகுதி இரண்டு இலட்சம் ரூபாவினை பயனாளிகள் கடனடிப்படையில் மீளச் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பணிமனைகளினூடாக தற்பொழுது இடம் பெற்று வருகின்றது. (86)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(24.06.2011 – வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம் ஆனி 09 ஆம் நாள்.

இராகுகாலம் 10.25–11.55, சுபநேரம் 5.55 –7.25

நட்சத்திரம் உத்தரட்டாதி பி.ப. 12.42 வரை

திதி: அட்டமி காலை 7.35 வரை.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை**

**மேடம்:–** மனமகிழ்ச்சி, குடும்பத்தில் குதூகலம், பண வரவு, நண்பர் வருகை, நிம்மதி.

**ரிஷபம்:–** குடும்பத்தில் நிம்மதிக் குறைவு, தேக ஆரோக்கியம், பண வரவு, கடன் வசூல், விபத்து வரலாம்.

**மிதுனம் :–** பணக் கஷ்டம், குடும்பத்தில் சலனம், உடல் நலமின்மை, மருத்துவச் செலவு, நண்பர் தொல்லை.

**கடகம்:–** குடும்பத்தில் குழப்பம், மனச் சஞ்சலம், தேக நலம் பாதிப்பு, உளச் சோர்வு, பயம்.

**சிம்மம்:–** வீண்அலைச்சல், பண வரவு, தேக ஆரோக்கியம், கடவுள் வணக்கம், அவலம்.

**கன்னி :–** பணக் கஷ்டம், குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், நண்பர் வருகை, தியாகம்.

**துலாம் :–** குடும்பத்தில் குழப்பம், பணக் கஷ்டம், உடல் நலம் பாதிப்பு, மருத்துவச் செலவு, வீண் அலைச்சல்.

**விருச்சிகம்:–** பணம் வரும், குடும்பத்தில் சந்தோஷம், மன மகிழ்ச்சி, உறவினர் வருகை, விபத்து வரலாம்.

**தனுசு:–** உளச் சோர்வு, பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்பம், மனச் சஞ்சலம், வீண் அலைச்சல்.

**மகரம்:–** பண வரவு, மனக்குழப்பம், குடும்பத்தில் நிம்மதிக் குறைவு, தேக நலம் பாதிப்பு, மருத்துவச் செலவு.

**கும்பம் :–** நண்பர் வருகை, பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், தேக ஆரோக்கியம், விபத்து வரலாம்.

**மீனம்:–** பண வரவு, நண்பர் தொல்லை, குடும்பத்தில் மகிழ்ச்சி, மூத்தோர் ஆசி, ஆதாயம்.



# விம்பிள்டன் இரண்டாவது சுற்றுக்கு பெடரர், ஷரபோவா முன்னேற்றம்



(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் முதல் சுற்றில் 3ஆம் நிலை வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 7-6, 6-4, 6-2 என்ற நேர்செட்டில் கஜகஸ்தானின் மிகைலை வீழ்த்தினார். இந்தியாவின் சோம்தேவ் வர்மன், ஜேர்ம னியின் டெனிஸ் கிரீமயரை எதிர்த்து ஆடினார். இதில் சோம்தேவ் 6-4, 4-2 என முன்னிலை வகித்த போது காயம் காரணமாக டெனிஸ் விலகினார். இதனால் சோம்தேவ் 2ஆவது சுற்றில் நுழைந்தார்.

பெண்கள் பிரிவில் நம்பர்-1 வீராங்கனையான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி 6-2, 6-1 என்ற கணக்கில் ஸ்பெயினின் சன்டோன ஜாவை தோற்கடித்தார். மரியா ஷரபோவா (ரஷ்யா) 6-2, 6-1 என்ற கணக்கில் சகநாட்டின் செக்வடசியை வீழ்த்தினார்.

மற்ற ஆட்டங்களில் அனா இவானோவிக் (செர்பியா), வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா), நா லீ (சீனா) ஆகியோர் வெற்றி பெற்று 2ஆவது சுற்றில் நுழைந்தனர். செர்பியாவின் ஜெலினா ஜன்கோவிக், இந்தியாவின் சானியா மிர்சா அதிர்ச்சி தோல்வியடைந்தனர்.

கடந்த விம்பிள்டன் போட்டியில் ஜான் இஸ்னர்(அமெரிக்கா), நிக்கோலஸ் மகுத்(பிரான்ஸ்) ஆகியோர் மோதிய ஆட்டம் சுமார் 11 மணி நேரம் நடந்தது. இந்த முறையும் இவர்கள் நேற்றுமுன் தினம் முதல் சுற்றில் மோதினர். பரபரப்பாக 2 மணி நேரம் நடந்த இந்த ஆட்டத்தில் ஜான் இஸ்னர் 7-6, 6-2, 7-6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

# மேற்கிந்திய அணிக்கு வெற்றி இலக்கு 326

(கிங்ஸ்டன்)

இந்திய - மேற்கிந்தியத்தீவு அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கிங்ஸ்டனில் நடைபெற்று வருகிறது. இந்தியா முதல இன்னிங்சில் 246 ரன் எடுத்தது. மேற்கிந்தியத்தீவு முதல் இன்னிங்சில் 173 ரன்னில் சுருண்டது.

73 ரன்கள் முன்னிலையில் 2ஆவது இன்னிங்சை விளையாடிய இந்தியா 2ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 91 ரன் எடுத்து இருந்தது. ராவிட் 45 ஓட்டமும், கோலி 14 ஓட்டமும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

நேற்றுமுன்தினம் 3ஆவது நாள் ஆட்டம் நடந்தது. இருவரும் தொடர்ந்து விளையாடினார்கள். மேற்கிந்தியத்தீவு அணி கப்டன் டரன் சமி, சுழற்பந்து வீரர் பிஷீ ஆகியோரின் அபாரமான பந்து வீச்சினால் இந்திய விக்கெட்டுகள் சரிந்தன. கோலி (15 ), ரெய்னா (27), டோனி (16), ஹர்பஜன்சிங் (5), பிரவீன்குமார் (6) ஆகியோர் அடுத்தடுத்து பெவிலியன் திரும்பினர்.

183 ரன்னில் இந்தியா 8 விக்கெட்டை இழந்தது. ஒரு முனையில் விக்கெட் விழுந்தாலும் மறுமுனையில் ராகுல் ராவிட் மிகவும் பொறுப்பாக விளையாடி இந்திய அணியை காப்பாற்றினார். அவர் 9ஆவது விக்கெட்டான மிஸ்ராவை வைத்துக் கொண்டு சிறப்பாக விளையாடி சதம் அடித்தார்.

151ஆவது டெஸ்டில் விளையாடும் ராவிட்டுக்கு இது 32ஆவது சதம் ஆகும். ஸ்கோர் 239 ஆக இருந்தபோது இந்த ஜோடி பிரிந்தது. மிஸ்ரா 28 ரன்னில் ஆட்டம் இழந்தார். மிகவும் அபாரமாக ஆடிய ராவிட் கடைசி விக்கெட்டாக ஆட்டம் இழந்தார். அவர் 274 பந்தில் 112 ரன் (10 பவுண்டரி, 1 சிக்சர்) எடுத்தார்.

இந்திய அணி 94.5 ஓவரில் 252 ரன்னில் ஆல்அவுட் ஆனது. இதனால் முதல் இன்னிங்சில் பெற்ற கூடுதல் ரன் மூலம் மேற்கிந்தியத்தீவுக்கு 326 ரன் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. மேற்கிந்தியத்தீவு தரப்பில் சமி, பிஷீ தலா 4 விக்கெட் கைப்பற்றினர்.

326 ரன் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் மேற்கிந்தியத்தீவு 2ஆவது இன்னிங்சை விளையாடியது.

நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் மேற்கிந்தியத்தீவு 3 விக்கெட் இழப்புக்கு 131 ரன் எடுத்து இருந்தது. பிராவோ 30 ரன்னிலும், சந்தர்பால் 24 ரன்னிலும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

# நீளம் தாண்டுதல் போட்டியில் ஜெசிகா எனிஸ் சாதனை




(லண்டன்)

பிரிட்டனைச் சேர்ந்த ஜெசிகா எனிஸ்மான் செஸ டர் தடகளம் போட்டியில் அற்புத மான வெற்றி பெற்றார்.

உலக மற்றும் ஐரோபபிய தடகளப் போட்டிகளின் சம்பியனான 25 வயது ஜெசிகா எனிஸ நீளம் தாண்டுதல் போட்டியில் வெற்றி வாகை சூடினார்.

ஈட்டி எறிதல் போடடியில் அவர் 2 ஆவது இடம் பெற்றார். எனிஸ் இந்த ஆண்டு குதிகால் காயம் காரணமாக 7 வாரம் எந்த போட்டியிலும் பங்கேற்க முடியாத நிலை இருந்தது.

மான்செஸ்டர் தடகளம் நீளம் தாண்டுதல் ஷெப்பீல்டின் முன்னனி வீராங்கனையான எனிஸ் 6.24 மீற்றர் தூரம் தாண்டி சாதனை படைத்தார். அவரையடுத்து வந்த அலெக்சாண்ட்ரா ரஸ்சலை விட 4 செ.மீ. தூரம் கூடுதலாக எனிஸ் பெற்றிருந்தார்.

ஈட்டி எறிதல் போட்டியில் எனிஸ் 44.81 மீற்றர் தூரம் எறிந்து 2ஆவது இடம் பெற்றார். முதலிடத்தைப் பெற்ற ஹேலே தாமஸ் 49.96 மீற்றர் தூரம் எறிந்தார்.

# தலைவர்களுக்காக அல்லாமல் நாட்டுக்காக விளையாடுகிறேன்



(கொல்கொத்தா)

தான் நாட்டுக்காகவே போட்டிகளில் விளையாடுவதாகவும் அணித்தலைவர்களுக்காக விளையாடுவதில்லை எனவும் இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங் கூறியுள்ளார்.

மேற்கிந்திய அணியுடனான ஒருநாள் போட்டிகளில் யுவராஜ் சிங் பங்குபற்றவில்லை. தன்னைவிட மிக கனிஷ்ட வீரரான சுரேஷ் ரெய்னாவின் தலைமைத்துவத்தின் கீழ் விளையாட விரும்பாதபடியாலேயே யுவராஜ் சிங் இச்சுற்றுப்போட்டியிலிருந்து விலகியிருந்தார் என வதந்திகள் உலவின.

இந்நிலையில், கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பங்குபற்ற வந்த யுவராஜ் சிங்கிடம் மேற்படி வதந்தி குறித்து கேட்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அந்தக் கேள்வி முற்றிலும் அடிப்படையற்றது. நான் சுகவீமுற்றிருந்தேன். இப்போது பயற்சியில் ஈடுபட ஆரம்பித்துள்ளேன். சுரேஷ் ரெய்னாவின் தலைமத்துவத்தின் கீழ் விளையாட நான் மறுத்தேன் என்பது முற்றிலும்அடிப்படையற்றது. நான் இந்தியாவுக்காகவே விளையாடுகிறேன். அணித் தலைவர்களுக்காக அல்ல என யுவராஜ் சிங கூறினார். சௌரவ், எம்.எஸ்.டோனி, கௌதம கம்பீர் ஆகியோரின் கீழ் நான் விளையாடியுள்ளேன். பல தலைவர்களின் கீழ் நான் விளையாடியுள்ளேன். நான் அணிக்கு வந்து 5 வருடங்களின் பின்னர்தான் கௌதமும் டோனியும் வந்தனர். எனவே அப்படியான எந்தப் பிரச்சினையும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# தோல்வி

(கொழும்பு)

இலங்கை விமானப்படையைச் சேர்ந்த பளுதூக்கும் வீரர் ரன்சிலு ஜய திலக்க, தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து சோதனையில் தோல்வியுற்றுள்ளதாக தேசிய பளுதூக்கும் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தேசிய பளுதூக்குதல் சம்பியன்ஷிப் போட்டிகளின்போது மேற்படி ஊக்க மருந்து சோதனை நடத்தப்பட்டதாகவும் அச்சம்மேளனம் தெரிவித்துள்ளது.

# இந்திய அணிக்குச் சாதகமானதாக ஆடுகளம் உள்ளதாகக் குற்றச்சாட்டு

(கிங்ஸ்டன்)

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் நடக்கும், கிங்ஸ்டன் ஜமைக்கா ஆடுகளம் இந்திய அணிக்கு சாதகமாக உள்ளது என மேற்கிந்திய அணியின் பயிற்சியாளர் ஓடிஸ் கிப்சன் குற்றம் சுமத்தியுள்ளார். சபினா பார்க் ஆடுகளத்தைப் பார்க்கும் போது இரு அணியினருக்கும் லேசான ஏமாற்றம்தான். ஆனால், எங்களை விட இந்திய அணிக்கு, சற்று அதிக சாதகமாகவுள்ளது.

போட்டியில் நாங்கள் முன்னிலை பெறுவதற்கு தேவையான அனைத்தையும் முயற்சிக்கிறோம். ஆனால் எங்களது துடுப்பாட்டம்தான் பெரும் பிரச்சினையாக வுள்ளது. துடுப்பாட்ட வீரர்கள் இந்திய அணியை விட அதிக ஓட்ட எண்ணிக்கையை எடுக்க முடியாமல் திணறுகின்றனர்.

இருப்பினும், முதல் இன்னிங்சில் ரெய்னா, ஹர்பஜன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதே, போட்டியின் திருப்பு முனையாகிவிட்டது. தவிர, இரண்டாவது இன்னிங்சில் ராவிட் கொடுத்த பிடியைத் தவறவிட்டதும் ஏமாற்றம் தான் தற்போதைய நிலையில் இந்திய அணியின் கைதான் ஓங்கி உள்ளது என அவர் தெரிவித்தார்.


# சாய்னா வெற்றி

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய ஓப்பன் பட்மின்ரன் தொடரின் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால் வெற்றி பெற்றார்.

இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தா நகரில், இந்தோனேஷிய ஓப்பன் சூப்பர் சீரிஸ் பிரிமியர் பட்மின்ரன் தொடர் நடக்கிறது. இதில் நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் முதல் சுற்றில் "நடப்பு சம்பியன்" இந்தியாவின் சாய்னா நேவால், பல்கேரியாவின் லிண்டா ஜீசிரியை சந்தித்தார். இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சாய்னா 21-12, 21-10 என்ற நேர்செட்டில் சுலபமாக வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். இரண்டாவது சுற்றில் சாய்னா, மற்றொரு பல்கேரிய வீராங்கனை பெட்யா நீடல்சேவாவை எதிர்கொள்கிறார்.

# இந்தியாவின் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர் சச்சின் என்கிறார் கொட்னி வோல்ஷ்



(கிங்ஸ்டன்)

இந்திய துடுப்பாட்ட வீரர்களில் சச்சின் டெண்டுல்கரே மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று மேற்கிந்தியத் தீவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கொர்ட்னி வோல்ஷ் தெரிவித்துள்ளார்.

இந்தியா - மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் போது இதுகுறித்து அவர் மேலும் கூறியது, என்னைப் பொறுத்தவரையில் சச்சினே இந்தியாவின் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர். சில நேரங்களில் அவர் எனக்குச் சவாலாகத் திகழ்ந்துள்ளார். சில நேரங்களில் நான் அவருக்குச் சவாலாக இருந்துள்ளேன். நாங்கள் இருவருமே போட்டியாளர்கள். நாங்கள் இருவரும் களத்தில் சந்திக்கும் போது இரு தரப்பிலுமே எங்களின் ஆட்டம் குறித்து பேசப்படும் என்றார்.

மேற்கிந்தியத்தீவு அணி குறித்துப் பேசிய அவர், இப்போதைய நவீன காலத்தில் சிறந்த வீரர்கள் இடம் பெற்றிருக்கின்றனர். பெரிய அளவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் வீரர்கள் தொடர்ச்சியாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவதில்லை. வீரர்களிடையே நம்பிக்கையில்லை. சில திறமையான மிகச சிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள் மேற்கிந்தியத்தீவு அணியில் இடம் பெற்றுள்ளனர்.

நாங்கள் கடுமையாக பயிற்சியில் ஈடுபட்டு விரைவில் வலுவான அணியாக உருவெடுப்போம் என்றார். அம்புரோசுடன் இணைந்து 1990 களில் மேற்கிந்தியத்தீவு அணியின் அசைக்க முடியாத வேகப்பந்து வீச்சாளராக திகழ்ந்தது குறித்துப் பேசிய அவர், நாங்கள் இருவருமே ஒருவர், மற்றொருவருக்கு ஆரோக்கியமான போட்டியாளர்களாகவே இருந்துள்ளோம். எங்களுடைய "ஸ்ரைல்" வித்தியாசமானது. அணிக்கு என்ன தேவையோ அதைச் சிறப்பாக செய்வதற்கே இருவரும் முயற்சித்தோம்.

ஆக்ரோஷமாக விளையாடுவது மிக முக்கியமானது. அவ்வாறு விளையாடுவதில் இருந்து ஒருபோதும் நாங்கள் இருவரும் சறுக்கியதில்லை. என்னைப் பொறுத்தவரையில் பந்து மட்டும் தான் பேசும் என்றார்.

வேகப்பந்து ஜாம்பவான் மைக்கல் கோல்டிங் குறித்துப் பேசிய அவர், நான் குழந்தையாக இருக்கும் போது அவரது ஆட்டத்தைப் பார்த்தேன். அதன்பிறகு இருவரும் ஒரே கிளப்புக்காக ஒன்றாக இணைந்து விளையாடினோம் என்றார். இவர்கள் இருவரும் ஜமைக்காவில் இருந்து மேற்கிந்தியத்தீவு அணிக்கு விளையாட வந்தவர்கள். இருவரும் மேற்கிந்தியத்தீவின் மிகச்சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களாகத் திகழ்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு செய்திகள்

## முன்பள்ளி விளையாட்டு விழா

(கிளிநொச்சி)

கனகபுரம் சிறிகாந்தா முன்பள்ளியின் சிறுவர் விளையாட்டுவிழா நாளை பிற்பகல் 1 மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி வலய ஆரம்பக்கல்வி பிரதிக் கல்விப்பணிப்பாளர் ரி.சின்னராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (112)

# உலகக் கிண்ணப் போட்டிகளை சிறப்பாக நடத்தியதா இலங்கை?



(கொழும்பு)

2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளை நடத்திய நாடுகளில் இலங்கையே மிகச் சிறந்தது என சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) தரப்படுத்தியுள்ளதாக சிறிலங்கா கிரிக்கெட் அமைப்பின் இடைக்கால நிர்வாகக் குழு செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்திருந்ததை ஐ.சி.சி நிராகரித்துள்ளது.

கடந்த திங்களன்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் நிஷாந்த ரணதுங்க தெரிவித்த இத்தகவலை பத்திரிகையொன்று செய்தியாக வெளியிட்டிருந்தது.

அதையடுத்து ஐ.சி.சியின் ஊடகப் பிரிவுத் தலைவர் கொலின் கிப்ஸன் இதை நிராகரித்துள்ளதாக ஜலண்ட் கிரிக்கெட் எனும் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ண சுற்றுப்போட்டியை நடத்திய அனைத்து நாடுகளுமே சிறந்த உலகக்கிண்ணத் தொடரை நடத்துவதற்கான அவற்றின் முயற்சிக்காக பாராட்டப்பட்டன. இது வரலாற்றின் மிகச் சிறந்ததொரு சுற்றுப் போட்டி என்பது பரவலாக உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும் என கிப்ஸன் தெரிவித்துள்ளார்.

ஏதாவது ஒரு நாட்டைவிட மற்றொரு நாடு சிறந்ததாக யாரும் இனங்கண்டதாக தமக்குத் தெரியவில்லை எனக் கூறிய அவர், பின்னர் அப்படியான ஒரு அறிக்கையை ஐ.சி.சிஜயச் சேர்ந்த எவரும் வெளியிடவில்லை எனவும் கூறினார்.

## வலைப்பந்தாட்டப் போட்டியில் 17 வயதுப் பிரிவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகள்



வடஇந்து மகளிர் கல்லூரி



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி



தெல்லிப்பளை யூனியன் கல்லூரி

# கிரிக்கெட் சபை அதிகாரிகள் பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு

(கொழும்பு)

சிறிலங்கன் பிரிமியர் லீக் போட்டிகளில் இந்திய வீரர்களை விளையாட அனுமதிப்பது குறித்து இலங்கை, இந்திய கிரிக்கெட் சபை அதிகாரிகளுக்கிடையே நடைபெறவிருந்த பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அதிகாரிகள் வேறு அவசர பணிகளில் ஈடுபட வேண்டியிருப்பதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கன் பிரிமியர் லீக் போட்டிகளில் இந்திய வீரர்களை விளையாட அனுமதிக்கப் போவதில்லை என இந்திய கிரிக்கெட் சபை அறிவித்ததையடுத்து இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்தியாவுக்கு செல்லுமாறு சிறிலங்கா கிரிக்கெட் தலைவர் டி.எஸ்.டி. சில்வா, செயலாளர் நிசாந்த ரணதுங்க ஆகியோரை விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே பணித்திருந்தார்.

இவ்விரு அதிகாரிகளுக்கும் இந்திய கிரிக்கெட் சபை அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நேற்று நடைபெறவிருந்தது.

எனினும் இரு நாடுகளின் கிரிக்கெட் சபை அதிகாரிகளும் தொலைபேசி மூலம் தொடர்பில் இருப்பார்கள். இந்திய வீரர்களை இப்போட்டிகளில் விளையாடச் செய்ய இன்னும் நாம் முயற்சிக்கிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடும் காலம் முடியவில்லை

(கராச்சி)

அணி நிர்வாகத்திலும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் செயற்பாடுகளிலும் முன்னேற்றம் விரைவில் ஏற்படும் என்று பாகிஸ்தான் ஒருநாள் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ஷாகித் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

வாரியத்தின் செயற்பாடுகளைப் பொறுத்து, தானும் விரைவில் சர்வதேச கிரிக்கெட்டிற்குத் திரும்புவேன் என்று மேலும் தெரிவித்தார். இங்கிலாந்து உள்நாட்டு கிரிக்கெட் அணியான ஹாம்ப்ஷயர் அணிக்கு விளையாடச் சென்றுள்ள அப்ரிடி தனது சர்வதேச கிரிக்கெட் இன்னமும் முடிந்து விடவில்லை என்று கூறினார்.

ஹாம்ப்ஷயர் அணிக்கு விளையாடுவது மகிழ்ச்சியளிக்கிறது. எங்கு சென்று விளையாடினாலும் ஒரு பாகிஸ்தான் கிரிக்கட் வீரராகவே நான் அங்கீகரிக்கப்படுகிறேன். எனவே நான் அங்கு நன்றாக விளையாடினால் அது பாகிஸ்தான் கிரிக்கெட்டிற்குத்தான் பெருமை சேர்க்கும்.

நான் பாகிஸ்தானுக்கு மீண்டும் விளையாட விரும்புகிறேன். நான் இன்று இருக்கிறேன் என்றால் அது பாகிஸ்தானால்தான். என்னுடைய அடையாளம் என்பது பாகிஸ்தான் வீரர் என்பதில் தான் உள்ளது. அதனை விட எனக்கு வேறொன்றும் பெரிது கிடையாது. எப்போது நிலைமைகள் முன்னேற்றம் அடைகிறதோ நான் மீண்டும் விளையாடுவேன். அதுவரை நிலைமைகள் சரியில்லை என்று பொருள் என்று கூறினார் அப்ரிடி.

# மிஸ்ராவுக்கு அபராதம்

(கிங்ஸ்டன்)

நடுவர் தீர்ப்பிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் செயற்பட்டதால் சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஷ்ராவுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் அமித் மிஷ்ரா துடுப்பாட்டம் செய்த போது அவருக்கு விக்கெட் கப்பர் கேட்ச் பிடித்ததாக அவுட் கொடுக்கப்பட்டது. ஆனால் அவர் உடனே வெளியேறாமல் தனது முழங்கை காப்பை சுட்டிக் காட்டி பந்து அதில் பட்டது என்று தெரிவித்தார்.

இதனால் அவர் நடுவர் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவிப்பது தவறு என்ற விதிமுறையின் கீழ் தனது ஆட்டத்தொகையில் 10 சதவீதத்தை அபராதமாக இழந்தார். துடுப்பாட்ட வீரர்கள் அவுட் கொடுக்கப்பட்ட பின்பு களத்திலிருந்து நகர நீண்ட நேரம் எடுத்துக் கொள்கிறார்கள். இது எதிர்ப்பு என்று கூற இடமில்லாவிட்டாலும், ஏமாற்றத்தை வெளிப்படுத்தும் விதமாக இருந்தாலும் தீர்ப்பளிக்கப்பட்ட பின்பு அதிக நேரம் எடுத்துக் கொள்ளக்கூடாது. அது விதி மீறல் என்று ஆட்ட நடுவர் ஜெப் குரோவ் தெரிவித்தார்.

# வேலைவாய்ப்பு என அழைத்துச் செல்லப்பட்ட சிறுமிகள்,யுவதிகள் பாலியல் தொழிலில்

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கைச் சேர்ந்த சிறுமிகள் மற்றும் யுவதிகளை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தும் வர்த்தக நடவடிக்கையொன்று அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு - தெமட்டகொட, மருதானை வீதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் நடத்தப்பட்ட தேடுதலின் போது வடக்கு கிழக்கைச் சேர்ந்த சிறுமிகள் மற்றும் யுவதிகள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

தொழில் வாய்ப்புத் தருவதாக அழைத்து சென்று இவ்வாறு பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை குற்றம் சுமத்தியுள்ளது.

இரகசிய அறையொன்றில் குறித்த பெண்களை அடைத்து வைத்து பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி வந்ததாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

16 வயதுடைய சிறுமி ஒருவருக்கு நிரந்தரக் குடும்பக் கட்டுப்பாட்டு சிகிச்சை அளிப்பதற்காக கொழும்பு வைத்திய சாலை ஒன்றுக்கு அழைத்துச் சென்ற போது குறித்த சிறுமி தப்பிச் சென்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததனைத் தொடர்ந்து ஏனைய பெண்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

# பொலிஸார் செய்யவேண்டிய கடமைகளில் இராணுவத்தை ஈடுபடுத்துவது எதற்கு?


## கேள்வியெழுப்புகிறார் ரணில்

(கொழும்பு)

பொலிஸாரின் கடமைகளுக்கு ஏன் இராணுவத்தினரை ஈடுபடுத்த வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

அண்மையில் சுதந்திர வர்த்தக வலய மோதல் சம்பவத்தில் கொல்லப்பட்ட ரொசான் என்ற ஊழியரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தனவை இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் சிறப்புரிமை கேள்வி ஒன்றை எழுப்பிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



அளவெட்டி பிரதேசத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் கடமைகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவது பொருத்தமாகாது என அவர் குறிப்பிடடுள்ளார்.

# அரசு - தமிழ்தரப்புடனான பேச்சில் முஸ்லிம்களையும் உள்ளடக்க வேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் வலியுறுத்து

(கொழும்பு)

**இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் அரசாங்கத்திற்கும் தமிழ்தரப்பிற்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் தரப்பும் உள்வாங்கப்பட்டு அதனை முத்தரப்பு பேச்சுவார்த்தையாக தொடர வேண்டியது அவசியமாகும். இதனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வலியுத்தியுள்ளேனென்று நீதியமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் இலங்கையிலுள்ள ஜப்பானிய தூதுவர் குனியோ தகஹாஷியிடம் தெரிவித்துள்ளார்.**



அரசியல் தீர்வு விடயத்தில் இங்கு வாழும் முஸ்லிம்களின் பரிணாமமும் இன்றியமையாதது என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இனப்பிரச்சினை தீர்வை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்திற்கும் தமிழ் தரப்பிற்குமிடையே கலந்துரையாடல்கள் நடைபெற்று வரும் சூழ்நிலையில், மற்றைய சிறுபான்மையினமான முஸ்லிம்கள் தொடர்பில் அவ்வாறான முயற்சிகள் ஏதும் நடைபெறும் சாத்தியக் கூறுகள் உள்ளனவா என ஜப்பானியத் தூதுவர் வினவியபோது பதிலளிக்கையிலேயே, அமைச்சர் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்குமிடையே நல்லுறவு நிலவுவதாகவும் இரு கட்சி முக்கியஸ்தர்களும் அவ்வப்போது சந்தித்து நல்லெண்ணத்துடன் கருத்துப் பரிமாற்றங்கள் செய்து கொள்வதாகவும் அமைச்சர் ஹக்கீம் மேலும் கூறினார்.

ஜப்பானியத் தூதுவர் அமைச்சர் ஹக்கீமை நேற்று முன்தினம் காலையில் அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இம்மாதம் 27 ஆம் திகதியிலிருந்து ஜூலை மாதம் முதலாம் திகதி வரை இலங்கையில் நடைபெறவுள்ள ஆசிய, ஆபிரிக்க சட்ட ஆலோசனை அமைப்பின் ஐம்பதாவது மாநாடு பற்றி இதன்போது முக்கியமாக ஆராயப்பட்டது. நீதியமைச்சும், வெளிவிவகார அமைச்சும் அதனைக் கூட்டாக ஏற்பாடு செய்துள்ளன.

# இராணுவத் தலைமையக விற்பனை மூலம் 29 பில்லியன் ரூபா நட்டமென குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொழும்பு காலிமுகத் திடலில் அமைந்திருந்த இராணுவத் தலைமையகக் காணிகளை விற்பனை செய்ததன் மூலம், 29 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

சங்கரி லா மற்றும் காடிக் லிமிட்டெட் நிறுவனத்திற்கு அரசாங்கம் விற்பனை செய்ததன் மூலம் பாரியளவு வரி வருமானம் இழக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த காணி விற்பனை தொடர்பான விபரங்களை அரசாங்கம் வெளியிடத் தயங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, முதலாம் காலாண்டுக்கான அரசாங்க விற்பனை வருமான விபரங்களில் குறித்த காணி விற்பனை பற்றிய தகவல்கள் குறிப்பிடப்படவில்லை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

வெளிப்படையான முறையில் இந்தக் கொடுக்கல் வாங்கல் நடைபெற்றதாக ஆளும் கட்சி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

# நிபுணர்குழு அறிக்கை உதாசீனமா? இல்லை என்கிறார் மார்ட்டின் நெஸ்ர்க்கி

(கொழும்பு)

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை உதாசீனம் செய்யப்படவில்லை, அவ்வாறு கூறப்படும் தகவல்களில் எந்த உண்மையுமில்லை என்று ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனின் பேச்சாளர் மார்ட்டின் நெஸ்ர்க்கி தெரிவித்துள்ளார்.

இன்னர்சிற்றி பிரஸ் ஊடகம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்

ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவின் பரிந்துரைகள் நிராகரிக்கப்படவில்லை. பரிந்துரைகளை அமுல்படுத்துவது குறித்து பான் கீ மூன் ஏற்கனவே கவனம் செலுத்தி வருகிறார் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்தப் பரிந்துரைகள் தொடர்பாக உள்ளக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்ட மார்ட்டின் நெஸ்ர்க்கி நிபுணர் குழு அறிக்கை உதாசீனம் செய்யப்பட்டுள்ளதாக வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

நிபுணர் குழுவினால் திரட்டப்பட்ட தரவுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்ளக நடவடிக்கைகள் குறித்தும் ஐ.நா. உன்னிப்பாக அவதானித்து வருகிறது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் இவ்வருடத்தில் மீள்குடியேற்றப்படுவர்

## அமைச்சர் வீரக்கோன் உறுதியளிப்பு

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் அனைத்து இடம்பெயர்ந்த மக்களையும் அரசாங்கம் மீள்குடியேற்றுமென மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள கதிர்காமர் நலன்புரி நிலையத்திற்கான விஜயமொன்றை மீள்குடியேற்ற அமைச்சர் மேற்கொண்ட வேளையிலேயே இதனைக் கூறினார்.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கையை இந்த வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளதாக அமைச்சர் கூறினார்.

243,787 மக்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். கதிர்காமர் நலன்புரிக் கிராமத்தில் 7156 இடம்பெயர் மக்களும் ஆனந்த குமாரசுவாமி நலன்புரி கிராமத்தில் 9132 இடம்பெயர் மக்களும் இன்னமும் உள்ளனர். இவர்கள் முல்லைத் தீவைச் சேர்ந்தவர்கள் ஆவார்.

ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள் ஏற்கெனவே மீள்குடியேற்றப்பட்டுள்ளனரெனவும் அவர் கூறினார்.

கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கை காரணமாகவே மீள்குடியேற்றம் தாமதமடைவதாக தெரிவித்த மீள்குடியேற்ற அமைச்சர், மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட முன்னர் கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

# இலங்கையில் மீண்டும் பிரிவினையை ஏற்படுத்த வெளிநாட்டுச் சக்திகள் சதிசெய்கின்றன

## குற்றஞ்சாட்டுகிறார் அமைச்சர் மஹிந்தானந்த



(கொழும்பு)

இலங்கையில் வாழும் இனங்களுக்குள் பிரிவினையை ஏற்படுத்த வெளிநாடுகள் சதிசெய்வதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றம் சாட்டியுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற மின் விநியோக அங்குரார்ப்பண வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

முப்பது வருட காலமாக நிலவிய போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, தற்போதுதான் நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் சுதந்திரமாகவும், நல்லிணக்கத்துடனும் வாழும் சூழல் ஓரளவுக்கேனும் ஏற்பட்டுள்ளது.

அதனைச் சீர்குலைத்து நாட்டில் வாழும இனங்களுக்கிடையில் மீண்டும் பிரிவினையையும், குரோதத்தையும் உருவாக்க வெளிநாடுகள் மேற்கொள்ளும் சதிமுயற்சிகள் குறித்து சனல் - 4 காணொளியின் மூலம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது.

புலிகள் இந்நாட்டின் அப்பாவி மக்களைக் கொத்துக் கொத்தாகப் படுகொலை செய்தபோது மனித உரிமை மீறல்கள் குறித்து வாயே திறக்காத இந்தச் சக்திகள், தற்போது மட்டும் மனித உரிமை குறித்து பேசுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

09. ..............................................................

10. ..............................................................

11. ..............................................................

12. ..............................................................

சமவலுப் பின்னங்களை எழுதுக.

13. 2/3 = ..........................................    14. 3/5 = ..........................................

பிரதி செய்து வெற்றிடங்களை நிரப்புங்கள்

| | இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகார நேரம் | எழுத்துக்களில் |
|---|---|---|
| 14. | 07 : 30 | .............................. |
| 15. | .............................. | ஒன்பது ஐந்து மணித்தியாலம் |

பின்வரும் நேரங்களை இருபத்து நான்கு மணித்தியாலயக் கடிகாரத்தில் காட்டும் முறையில் இலக்கங்களில் எழுதுங்கள்.

16. அமீன் விழித்தெழுந்து முற்பகல் 5.45 இற்காகும்.

..............................................................

17. கண்டி புகையிரதம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து புறப்படுவது பிற்பகல் 4.40 இற்காகும்.

..............................................................

பின்வருவனவற்றைத் தீருங்கள்

18. மீனா முற்பகல் 6.45 இற்கு வீட்டில் இருந்து புறப்பட்டு 25 நிமிடங்களின் பின்னர் பாடசாலையை அடைந்தாள். அவள் பாடசாலையை அடைந்த நேரம் யாது?

..............................................................

19. சமன் பிற்பகல் 10.30 இற்கு நித்திரைக்குச் சென்று அடுத்த நாள் முற்பகல் 5.30 இற்கு விழித்தெழுந்தான். அவன் எவ்வளவு நேரம் நித்திரை செய்தான்?

..............................................................

20. 4 லீற்றர் நீர் கொள்ளும் பாத்திரமொன்றை நிரப்புவதற்கு 200 மில்லி லீற்றர் கோப்பையினால் எத்தனை தடவைகள் நீர் ஊற்ற வேண்டும்?

..............................................................

21. 3 லீற்றர் நீர்கொள்ளும் பாத்திரமொன்றை நிரப்புதற்கு 500 மில்லி லீற்றர் கோப்பையொன்றினால் எத்தனை தடவைகள் நீர் ஊற்ற வேண்டும்?

..............................................................

**22. பெறுமானம் காணுங்கள்**

1)
```
   l   ml
   7   225
 + 5   350
 ---------
```

2)
```
   l   ml
   6   250
 + 5   750
 ---------
```

**23. கழியுங்கள்**

1)
```
   l   ml
   8   750
 - 4   300
 ---------
```

2)
```
   l   ml
   6   450
 - 3   625
 ---------
```





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I, II

விடைகள்

# கல்விமுரசு

வெளியீடு 19



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்

## பகுதி -I

| | | | |
|---|---|---|---|
| 1. | 5 | 22. | 4 |
| 2. | 3 | 23. | 3 |
| 3. | 6 | 24. | 3 |
| 4. | 55 | 25. | 1 |
| 5. | 73 | 26. | 1 |
| 6. | 3 | 27. | 3 |
| 7. | 3 | 28. | 2 |
| 8. | 4 | 29. | 2 |
| 9. | 2 | 30. | 3 |
| 10. | 4 | 31. | 4 |
| 11. | 1 | 32. | 1 |
| 12. | 4 | 33. | 2 |
| 13. | 3 | 34. | 3 |
| 14. | 1 | 35. | 2 |
| 15. | 1 | 36. | பந்து |
| 16. | 1 | 37. | நத்தை |
| 17. | 2 | 38. | நீர் |
| 18. | 4 | 39. | 4 |
| 19. | 1 | 40. | 4 |
| 20. | 3 | | |
| 21. | 1 | | |

**புள்ளியிடல் விபரம்**

40 X 2.5 = 100 புள்ளிகள்

## பகுதி -II

01. செல்வி பவித்திரா பன்னீர்ச் செல்வம்
02. தரம் - 05
03. பண்டத்தரிப்பு இந்து மகளிர் கல்லூரி
04. இல.14, தூய அன்னை வீதி, பண்டத்தரிப்பு கிழக்கு
05. தந்தை - பன்னீர்ச் செல்வம்
06. 01 (பொருத்தமான விடை)
07. மாணவர் ஒப்பம்
08. பதிவுத் தபால்
09. முத்திரை
10. இருந்து / From
11. சேரல் / To
12. செல்வி பவித்திரா பன்னீர் செல்வம்
    இல. 14, தூய அன்னை வீதி,
    பண்டத்தரிப்பு கிழக்கு.
13. "தபால் மூலப் பயிற்சி நெறி"
    இல. 38, கோயில் வீதி.
14. Birds
15. பட்சி
16. புறா
17. கிளி, மைனா
18. வௌவால், ஆந்தை
19. கழுகு
20. வௌவால்
21. நன்மை - தீங்கு விளைவிக்கும் பூச்சிகளைக் கொல்லுதல்
    தீமை - பயிர்களுக்கு சேதம் விளைவித்தல்
22. காகம்
23. கிளி
24. Black
25. Green
26. இராசையா, அபூபக்கர், பண்டார
27. உமறுப்மன்சூர்→பண்டார→அபூபக்கர்→இராசையா
28. அபூபக்கர்→இராசையா→உமறுமன்சூர்→பண்டார
29. 6 மீற்றர் 95 சென்ரி மீற்றர்
30. ஆம் - பெயர்களை வைத்து அவர்கள் இனங்களை அறியலாம்.
31. X
32. O, X

34. X

35. பாதுகாப்பான பொதி செய்தல்

36. பதத்திற்கு முன் பறித்தல்

37. உப்பிடல் / கருவாடாக்கல்

**புள்ளியிடல் விபரம்**

80 X 1.1 = 88 புள்ளிகள்

6 X 2 = 12 புள்ளிகள்

| | பிராணியின் பெயர் | உடலின் தன்மை | | | | உணவு வகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஈரலிப்பான தோல் | இறகு உடையவை | செதில்/ஓடு கொண்டவை | சாதாரண தோல் | தாவர உணவு | மாமிச உணவு | அனைத்தும் உண்பவை |
| | காகம் | | X | | | | | X |
| 38. | பாம்பு | | | X | | | X | |
| 39. | முயல் | | | | X | X | | |
| 40. | தவளை | X | | | | X | | |
| 41. | கழுகு | | X | | | X | | |
| 42. | நத்தை | | | | | X | | |

43. முக்கனி

44. சுயசரிதை

45 பவள விழா

46. வள்ளல்

47. ஐம்பொறி

48. தபோவனம் / ஆச்சிரமம்

49. சகபாடி

50. பாலை

51. பெரிய பெரிய

52. கணக்கு வழக்கு

53. நெறு நெறு

54. கந்தையானாலும் கசக்கிக் கட்டு

55. பால் போல நிலவு

56. விகடம்

57. தரணி

58. 3

59. 2

60. 4

61. 4

62. 1

63. 2

64. 1

65. 2

66. 2

67. 2

68. புடோல், பூசணி, அறுகு

69. கத்தரி, மிளகாய், தேயிலை

70. தேயிலை, தென்னை, இறப்பர்

71. பனை

72. தென்னை

73. Tea

74. ஹட்டன், தலவாக்கொல, நுவரெலியா, பதுளை

75. ஆங்கிலேயர் / பிரித்தானியர்

76. தலவாக்கொல

77. இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா

78. பாகிஸ்தான், ஈரான், ஈராக்


79. வினாவுக்கான விடைகள் சரியான எழுவாய், பயனிலையுடன், ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.



**பின்வரும் வினாக்களுக்கு விடை காண்க.**

01. 6403 எனும் எண்ணில் 6 குறிக்கும் பெறுமானம் யாது?

..........................................................................................



02. இத்திண்மத்தின் பெயர் யாது?

..........................................................................................

03. இத்திண்மத்தின் உருவாகும் செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

04. ஒரு பொதியின் நிறை 2 kg 300g எனின், அவ்வாறான 8 பொதிகளின் நிறை யாது?

..........................................................................................

05. ஒரு பிள்ளையிடம் 5 ரூபாய் நாணயமொன்றும் ஒரு ரூபாய் நாணயமொன்றும் 50 சத நாணயமொன்றும் 25 சத நாணயமொன்றும் உள்ளது. அதன்படி, அப்பிள்ளையிடம் உள்ள நாணயங்களின் மொத்தப் பெறுமதி யாது?

..........................................................................................

பிரதி செய்து வெற்றிடத்தில் பொருத்தமான எண்களை எழுதுங்கள்.

06. I. 7 X 6 =..................................................

II. 9 X ........................... = 63

பிரதி செய்து தீருங்கள்

07. I. 479 ÷ 6 =..................................................

II. 369 ÷ 8 = ..................................................

தீருங்கள்


07. றோசியும், மீனாவும் பேருந்துப் பயணமொன்று சென்றனர். ஒருவருக்கான பேருந்துக் கட்டணம் ரூபாய் 8.50 ஆகும். இருவரதும் பேருந்துக் கட்டணம் எவ்வளவு?

..........................................................................................

08. சமன் ஒன்று ரூபாய் 9.00 வீதம் 5 மாம்பழங்களை விலைக்கு வாங்கி ரூபாய் 100 ஐக் கொடுத்தால் அவனுக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?


..........................................................................................

கீழேயுள்ள ஒவ்வோர் உருவின் பரப்பளவு யாது? (கட்டடம் ஒன்றின் நீளம் 1 cm ஆகும்)






**கி**ன்னஸ் சாதனை படைத்த இந்த அழகான பாலம் South Koreaவில் உள்ளது. Banpo என்றழைக்கப்படும் இந்தப் பாலம் Han நதிக்கு மேல் அமைந்துள்ளது. இந்த இரவுநேர வானவில் நீர்வீழ்ச்சி கடந்த 2009 ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. 43 மீற்றர் நீளமுள்ள இந்த பாலத்தில் 38 தண்ணீர்க்குழாய்களும் 380 துளைகளும் உள்ளன. இந்த நீர்வீழ்ச்சியில் நிமிடத்திற்கு 190டன் அளவு தண்ணீர் வெளியாகிறது. இதற்குத் தேவையான நீர் Han நதியிலிருந்து எடுத்து கொள்ளப்படுகிறது.




## கால்களால் மாற்றலாம் ரயர்

**மெ**ட் ஸ்டுட்ஸ்மன் என்ற நபருக்கு பிறவியிலேயே இரு கரங்களும் கிடையாது. இப்போது வயது 28. இவ்வாறான குறைபாடு உள்ளவர்களை அவர்களின் குறையைக் குறிப்பிடாமல், மாற்றுத்திறன் உடையோர் அல்லது வித்தியாசமான ஆற்றல் உடையோர் என அழைக்குமாறு சிபார்சு செய்யப்படுகின்றது. இவர் அதற்கு முற்றிலும் பொருத்தமானவர். குறி பார்த்து அம்பு ஏய்துவதில் இவர் தேர்ச்சி பெற்றவர். வித்தியாசமான ஆற்றல் உடையோருக்கான அடுத்த ஒலிம்பிக் போட்டிகளுக்காக இவர் தன்னைத் தயார்படுத்தி வருகின்றார். இவர் தனக்கென ஒரு தொழிலையும் செய்து வருகின்றார். வாகனங்களுக்கான டயர்களை




கழற்றி மாற்றுவதில் இவர் கில்லாடி. இரண்டு கரங்களும் இல்லாத நிலையில் எல்லாமே காலகள்தான். ஒன்பது நிமிடங்களில் வாகன டயர் ஒன்றை கழற்றி இவர் மாற்றி விடுகின்றார். அதேபோல வாகனங்களின் ஏனைய சிறு பிரச்சினைகளையும் இவர் சரி பார்த்து விடுகினறார். வாகனம் ஒன்றை ஓட்டிப் பார்க்க வேண்டும் என்பது இவருக்கு சிறுவயது முதலே உள்ள ஆசை. ஆனால் பிரிட்டிஷ் சட்ட திட்டங்களின்படி அது நிறைவேறுவது கடினம்.




## திறப்பைத் தேடாதீர்

**கா**ரை செலுத்துவதற்கு சாவியைத் தேடி இனி பதற்றமடைய வேண்டாம். கைரேகையை காண்பித்தால் போதும் காரைச் செலுத்தி விடலாம். சிவிகேபி- பிஜி04 என்ற பெயரிடப்பட்டுள்ள புதிய சாதனம், கைரேகை அடையாளத்தை வைத்து காரை செலுத்துவதற்கு அனுமதிக்கிறது. இந்தச் சாதனம் டியூவல் பேண்டு ஜிஎஸ்எம் சிம் கார்டு உதவியுடன் இயங்குகிறது. ஸ்டீயரிங் வீல் பின்புறம் டேஷ்போர்டில் பொருத்திக் கொள்ளும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தச் சாதனத்தில் காரின் உரிமையாளர் தனது விரல் ரேகையை பதிவு செய்துகொண்டால் போதும். திறப்பு இல்லாமல், வெறும் கைரேகை அடையாளத்தை வைத்தே காரை செலுத்துவதற்கு இந்த சாதனம் அனுமதிக்கிறது. மேலும், 9 பேரின் கைரேகையை இந்த சாதனத்தில் பதிவு செய்து கொள்ளும் வசதியும் இருக்கிறது. அன்னியர்கள் யாரேனும் காரை செலுத்துவதற்கு முயற்சி செய்தால், உடனடியாக உரிமையாளருக்கு இந்த சாதனம் கைத்தொலை பசிக்கு மூலம் தகவல் தெரிவித்துவிடுகிறது. தவிர, காரில் பொருத்தப்பட்டிருக்கும் அபாய மணியும் ஒலிக்கும். கார் திருட்டை முற்றிலும் தடுக்கும் வகையில் இந்த சாதனம் வடிவமைக்கப்பட்டுள்ளது. சாதனத்தின் சிறப்பம்சங்கள்: 9 பேரின் கைரேகைகளை பதிவு செய்து கொள்ளும் வசதி. தேவையில்லாதவர்களின் கைரேகை பதிவை எளிதில் நீககிவிட முடியும். ரிமோட் மூலம் காரை திறந்து மூடும் வசதி. கைத்தொலைபேசியிலிருந்து எஸ்எம்எஸ் அனுப்பினால் எஞ்சினுக்கு எரிபொருள் செல்வதை இந்த சாதனம் நிறுத்திவிடும். கார்க் கதவை உடைத்து திறக்க முயற்சித்தால் எஸ்.எம்.எஸ் மூலம் உரிமையாளரை எச்சரிக்கும். அவசர தேவைக்கு புதியவர்களும் காரை செலுத்துவதற்கு அனுமதிக்கும் வசதி.





## Skype இல் இருந்து Face Book செல்ல





ஸ்கைப் மிக அண்மையில் தனது புதிய பதிப்பான 5.5 என்ற பீட்டா பதிப்பினை வெளியிட்டுள்ளது. இந்த பதிப்பின் மிகப்பெரிய மாற்றமே உங்களது ஸ்கைப் கணக்கில் இருந்தவாறு உங்கள் முகபக்கத்தை ( face book) அணுகும் வசதி செய்யப்பட்டுள்ளமை ஆகும். இதன் மூலம் உங்கள் முகப்பக்கத்தில் உள்ள நண்பர்களுடன் அரட்டை மற்றும் தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்ள முடியும் .

ஸ்கைப் கணக்கில் இருந்தவாறு முகப்பக்கத்தில் ஆன்லைன் இல் உள்ள நண்பர்களுடன் அரட்டை செய்யலாம். இதற்கு வசதியாக நண்பர்களின் ஆன்லைன் வருகையை ஒவ்வொரு முறையும் உங்களுக்கு தெரியப்படுத்தும். ஸ்கைப் கணக்கில் இருந்தவாறு முகப்பக்கத்தில் நண்பர்கள் பகிர்ந்துகொண்ட தகவல்களை பார்க்க முடிவதுடன் அவற்றுக்கு பதில் (கமெண்ட்) அனுப்பவும். லைக் (like ) பண்ணவும் முடியும். இந்த வசதிகளைப் பெற ஸ்கைப் புதிய பதிப்பினை தரவிறக்கம் செய்து நிறுவிய பின் உங்கள் ஸ்கைப் கணக்கினை திறந்துகொள்க. இப்போது வலது பக்க மூலையில் FACE BOOK பட்டன் தரப்பட்டுள்ளது. அதனை கிளிக் செய்து உங்கள் FACE BOOK கணக்கினை அடைவதற்கான முகவரி மற்றும் பாஸ்வோர்ட் கொடுத்து கிளிக் செய்தால் உங்கள் FACE BOOK தகவல்களை சென்றடைய அனுமதி கோரப்படும். நீங்கள் அனுமதி வழங்குவதன் மூலம் ஸ்கைப் கணக்கில் இருந்தவாறு FACE BOOK பக்கத்தினை அடைய முடியும் . அத்துடன் மேலே சொன்ன வசதிகளைப் பெறலாம் .

தரவிறக்கம் செய்ய :-
http://www.skype.com/intl/en/get-skype/on-your-computer/windows/beta/

கணினி மூலை

## ஐ போனைப் பாதுகாக்க



வியாபாரத்தின் வெற்றி விளம்பரத்தில் தங்கி உள்ளது. ஆனால் விளம்பரத்தின் வெற்றி செக்ஸில் தங்கி உள்ளது என துறைசார் நிபுணர்கள் நினைக்கின்றார்கள் போலும்? ஐ போன் மிகவும் பிரபலமான நவீன தொலைத்தொடர்பு சாதனங்களில் ஒன்று. சீனாவில் ஒரு இளைஞன் கிட்னியை விற்று ஐ போன் வாங்கியிருக்கின்றார் என்கிறபோது இளம் வட்டங்களிடையே ஐ போனும் மதிப்பும் மவுசும் மிகவும் உயர் நிலையிலேயே உள்ளன என்பது வெளிப்படை. ஐ போனை உள்ளே வைத்து பாதுகாத்தல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்காக ஒரு கவர் ஒன்று அப்பிள் கம்பனியால் உருவாக்கப்பட்டு சந்தைக்கு வந்து உள்ளது.

இது வரை காலமும் வந்து இருக்கும் கவர்களைக் காட்டிலும் இது மிகவும் வித்தியாசமானது. ஆம். மார்பகங்களின் தோற்றத்தில் இக்கவர் அமைந்து உள்ளது. இக்கவரின் பெயரே iBoobies என்பது.

# நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியின் அலுவலகம் உளவு பார்க்கப்பட்டால் விசாரணை தேவை

## - சுஷ்மா சுவராஜ் வலியுறுத்து



(புதுடில்லி)

மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியின் அலுவலகம் உளவு பார்க்கப்பட்ட விவகாரத்தில், சுவர்களில் ஒட்டப்பட்டிருந்தது, பபிள்கமாக இருக்கலாம் என்ற உளவுத் துறையின் பேச்சு, மிகவும் வேடிக்கையானது. இது குறித்து, அரசு முழு விசாரணை மேற்கொள்ள வேண்டும் என பா.ஜ.தலைவரும், லோக்சபா எதிர்க்கட்சித் தலைவருமான சுஷ்மா சுவராஜ் கூறியுள்ளார்.

டில்லியில், மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியின் அலுவலகமான நோர்த் பிளாக்கில், 16 இடங்களில் பசை தடவப்பட்டு, அவற்றில் மிகச் சிறிய கமரா, மைக் உள்ளிட்டவற்றைப் பொருத்தி, உளவு பார்க்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின. அத்துடன், பிரணாப் முகர்ஜியின் மேசைக்கு அடியில் மூன்று இடங்களில் சந்தேகத்திற்கு இடமான வகையில் சில பொருட்கள் ஒட்டப்பட்டிருந்ததாகவும், தரையில் சிறிய குழிகள் இருந்தன என்றும், அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டது. இதற்கு உளவுத் துறையினர் வெளியிட்ட அறிக்கையில், அலுவலகச் சுவர்கள் மற்றும் பிரணாப்பின் மேசைக்கு அடியில் ஒட்டப்பட்டிருந்த பொருள், பபிள்கமாக இருக்கலாம். இவற்றை, அங்கு பணியாற்றும் ஊழியர்கள் தடவியிருக்கலாம் என்றனர். இதுகுறித்து, செய்தியாளர்களிடம் பேசிய லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் கூறியதாவது: நிதி அமைச்சரின் அலுவலகம் உளவு பார்க்கப்பட்டது மிகவும் கவலை தரும் விடயம்.

இவ்விவகாரத்தை நான் இந்தியாவின் வோட்டர்கேட் விவகாரம் என்றே குறிப்பிடுகிறேன். அமெரிக்காவில், "வோட்டர் கேட்" ஊழல், எதிர்க்கட்சியினருக்கு எதிராக நடத்தப்பட்டது. அதில், அப்போதைய அமெரிக்க அதிபர் தன் பதவியை ராஜினாமா செய்தார். இங்கு, மத்திய அரசு தனது சொந்த நிதியமைச்சருக்கு எதிராக வேவு பார்த்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியச் செய்திகள்

## சமூக சேவைக்கு போர்ப்ஸ் விருது

(சிங்கப்பூர்)

சமூக சேவைத் துறையில் ஆசிய கண்டத்தில் இருந்து இந்தியாவை சேர்ந்த நான்கு பேர்களை போர்ப்ஸ் பத்திரிகை தேர்வு செய்துள்ளது. போர்ப்ஸ் பத்திரிகை சார்பில் கடந்த ஆண்டுகளாக சமூக சேவையில் சிறந்து விளங்குபவர்களுக்காக ஹீரோஸ் ஒப் பிலான்தெரோபி என்ற விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்தாண்டுக்கான விருதுக்காக இந்தியாவை சேர்ந்த நான்கு பேர் உட்பட 48 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் முன்னிலை வகிப்பவர்கள் எச்.சி.எல். நிறுவனத்தை சேர்ந்த சிவ்நாடார். இவர் கிராமங்களில் உள்ள குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு உதவிகள் வழங்கி வருகிறார். இரண்டாம் இடத்தைப்பிடித்துள்ள விப்ரோ நிறுவனத்தின் ஆஸிம் பிரேம்ஜி குழந்தைகளின் நலன் மற்றும் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டுள்ளதையும் இப்பத்திரிகை பாராட்டியுள்ளது. மேலும் ஜி.எம்.ஆர் குழுமத்தைச் சேர்ந்த மல்லிகார்னஜுனராவ் இந்தியா மற்றும் நேபாள நாட்டில் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக 20க்கும் மேற்பட்ட இடங்களில் கல்வி கற்றுத் தருவதற்கு உதவிவருகிறது. இவர்களுடன் பாலிவுட் நடிகர் விவேக்ஓபராய் கல்வி, சுகாதாரத்திற்கு அளித்து வரும் உதவி குறித்தும் போர்ப்ஸ் நிறுவனம் பாராட்டி விருதுக்காக தேர்வு செய்துள்ளது.

## தமிழக மீனவர்மீதான தாக்குதல் அரசின் இயலாமையே காரணம்

### - பாரதிய ஜனதா குற்றச்சாட்டு

(சென்னை)

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் சம்பவம் தொடர்வதற்கு மத்திய அரசின் இயலாமையே காரணம் என்று தமிழக பாஜக தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் குற்றம்சாட்டினார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய பொன். ராதாகிருஷ்ணன்,

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், கடத்தப்படுவதும், சுட்டுக் கொல்லப்படுவதும் தொடர்ந்து வருகிறது. பேரவையில் தீர்மானம் நிறைவேற்றினாலும், பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கு தமிழக அரசு கடிதம் எழுதினாலும், போராட்டங்கள் நடத்தினாலும் இலங்கைப் படையினரின் அட்டகாசம் நின்றபாடில்லை. இதற்கு மத்திய அரசின் இயலாமையே காரணம் என்றார்.



கடல்வழியாக தமிழகத்திற்குள் தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, தமிழகத்தின் 13 மாவட்டங்களில் பொலிஸார் தீவிர சோதனையில் ஈடுபட்டுள்ளதனைக் காணலாம்.

# மீனவர்களின் ஆர்ப்பாட்டத்தை அடுத்து இலங்கைத் தூதரகத்திற்கு பாதுகாப்பு



(சென்னை)

சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் சிலர் இலங்கை பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ராமேஸ்வரம் மீனவர்களால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இந்த ஆர்ப்பாட்டங்களால் இலங்கைத் தூதரகத்துக்கு எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படாதிருக்கும் வகையில் இந்தப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக மேற்படி செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இலங்கை கடற்பரப்பினுள் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 23பேரும் அவர்களது ஐந்து படகுகளும் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில், மேற்படி மீனவர்கள் 23பேரையும் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் திருமதி கே.ஜீவராணி உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனிமொழிக்கு பிணை வழங்குமாறு மருத்துவமனைக்கு வெடிகுண்டு மிரட்டல்

(கரூர்)

தமிழக முன்னாள் முதல்வர் மு. கருணாநிதியின் மகளும், மாநிலங்களவை உறுப்பினருமான கனிமொழியை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி கரூரிலுள்ள அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு நேற்று முன்தினம் வெடிகுண்டு மிரட்டல் கடிதம் வந்தது.



அந்தக் கடிதத்தில், கனிமொழியை பிணையில் வெளியே விடவேண்டும். தமிழகத்தில் சமச்சீர் கல்வியை அமுல்படுத்த வேண்டும். இல்லையென்றால், மருத்துவமனையில் புதன்கிழமை 2 மணிக்கு வெடிகுண்டு வெடிக்கும். இவண், தமிழ்க் கல்வி வளர்ச்சிப் படை, கரூர்-1. என்று எழுதப்பட்டிருந்தது.

இதுகுறித்து கரூர் நகர பொலிஸ் நிலையத்தில் சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் ராஜு புகார் அளித்தார். இதையடுத்து, பொலிஸார் மோப்ப நாய் ஸ்னூபி, வெடிகுண்டு கண்டறியும் கருவி ஆகியவற்றுடன் மருத்துவமனைக்குச் சென்று சோதனையிட்டனர். நீண்ட நேர சோதனைக்குப் பின்னர், வெடிகுண்டு மிரட்டல் புரளி எனத் தெரியவந்தது.

இந்நிலையில், புதன்கிழமை கரூர் அரசுத் தலைமை மருத்துவமனைக்கு உலக வங்கி மருத்துவக் குழுவினர் வந்திருந்தனர். இந்தக் குழுவின் கவனத்தை திசை திருப்புவதற்காகவும் இதுபோன்ற செயல் நடைபெற்றிருக்கலாம் என்ற கோணத்தில் கரூர் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மனிதாபிமானமற்ற வகையில் கனிமொழி சிறையில் அடைப்பு

## - கருணாநிதி வேதனை




(சென்னை)

கனிமொழியை மனிதாபிமானமற்ற முறையில் சிறையில் அடைத்துள்ளனர் என தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறினார்.

கருணாநிதி சென்னையில் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், சிறையில் அடைக்கப்பட்டுள்ள தி.மு.க. எம்.பி. கனிமொழி, முன்னாள் அமைச்சர் ராஜா, கலைஞர் "ரிவி"யின் நிர்வாக இயக்குனர் சரத்குமார் ஆகியோரை சந்திப்பதற்காக டில்லி சென்றேன். கனிமொழிக்கு உடலில் கொப்பளங்கள் ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளார். சரத்குமார், சிறையில் பலவீனமாக காணப்பட்டார்.கனிமொழியை மனிதாபிமானமற்ற முறையில் சிறையில் அடைத்துள்ளனர். அவர்மீது பத்திரிகைகளில் வெளியான பொய்யான குற்றச்சாட்டுகளை சி.பி.ஐ. நிரூபிக்க முயற்சி செய்து வருகிறது. தி.மு.க. மற்றும் காங்கிரஸ் இடையேயான உறவு எவ்வித இடையூறுக்கும் அப்பாற்பட்டு சீராகவுள்ளது. லோக்பால் சட்டத்தின் கீழ் பிரதமரை கொண்டு வருவதை உங்களது கருத்துக்கே விட்டுவிடுகிறேன். மாநில முதல்வர்களை லஞ்ச ஒழிப்பு சட்டத்தின் கீழ் விசாரிக்க வேண்டும் என்பது, தி.மு.க. வின் நிலைப்பாடு. அண்ணா ஹசாரேவின் நல்ல பணிகளை ஆதரிக்கிறோம். உள்நோக்கத்துடன் செயற்படுவதை தி.மு.க. எப்போதும் ஆதரிக்காது.இவ்வாறு கருணாநிதி கூறினார்.

# உலகின் வயதான பெண் பிரேசிலில் மரணமானார்



(ரியோ-டி-ஜெனிரோ)

உலகின் மிகவும் வயதா பெண் என உலக சாதனை படைத்தவர் 114 வயதில் மரணமடைந்தார். பிரேசிலின் காரங்கோலா மாகாணத்தைச் சேர்ந்தவர் மரியா கோம்ஸ் வெலன்டிம் 114 இவர் கடந்த 1896ஆம் ஆண்டு ஜூலை மாதம 9ஆம் திகதி பிறந்தார். கடந்த மே மாதம் 9ஆம் திகதி இவர் உலகின் மிகவும் வயதான பெண் என்ற பெருமையினை பெற்றார். கடந்த 1946ஆம் ஆண்டு இவரது கணவர் இறந் ததைத்தொடர்ந்து விதவையாக வாழ்ந்து வந்தார். இந் நிலையில் கடந்த சில நாட்களாக நோய் தொற்று காரணமாக உடல் பாதிக்கப்பட்டு உடல் உறுப்புகள் செயல் இழந்தன. மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக அந்நாட்டு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. இன்னும் சில நாட்களில் தனது 115 ஆவது பிறந்த நாள் (ஜூலை 9ஆம் திகதி) கொண்டாட இருந்த நிலையில் இறந்துவிட்டார். இவருக்கு ஒரே ஒரு மகன் மட்டும் இருந்தார். அவரும் 75 வயதில் இறந்தார். முன்னதாக ஜியார் ஜியா நாட்டைச் சேர்ந்த பெஸ்ஸிகோப்பர் என்பவர் இவருக்கு அடுத்தபடியாக மிகவும் வயதான பெண் என்ற பெருமை பெற்றார். இவர் இறந்து போன மரியா கோம்ஸ் வெலன்டிமை விட 48 நாட்கள் இளையவர் ஆவர்.

## உலகச் செய்திகள்

# 2012இல் படை வாபஸ்

(வொஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் இருந்து 2012 ஆம் ஆண்டு கோடைகாலத்திற்கு முன்பாக அமெரிக்கப் படைகள் வாபஸ் பெறப் படும் என்று ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார். வொஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் நடை



பெற்ற டி.வி.,நிகழ்ச்சிக்கு பேட்டியளித்த அவர் இவ்வாறு தெரிவித்தார். படைகள வாபஸ் பெறுவதை முன்னிட்டு இந் தாண்டு இறுதிக்குள் 10 ஆயிரம் பேர் வரை வாபஸ்பெறப்படும் என்றும், தொடர்ந்து மீதமுள்ள வீரர்கள் படிப் படியாக வாபஸ் பெறப்படுவர் என்றும் தெரிவித்துள்ளார்.

# அரசியல் ரீதியான வன்முறையில் மாற்றம் செய்யவுள்ளாராம் சூகி



(லண்டன்)

வன்முறைக்கு எதிரான தனது கொள்கையில் சிறிது மாற்றம் செய்து கொள்ளப் போவதாக மியான்மார் நாட்டின் தேசிய ஜன நாயக லீக் கட்சித் தலைவர் ஆங் சான் சூகி தெரிவித்துள்ளார்.

மியான்மர் தலைநகர் நேப் இ டவ்வில் ரகசிய அறையில் இருந்து, லண்டன் பி.பி.சி. தொலைக் காட் சிக்கு ஆங் சான் சூகி அளித்த பேட்டியில், நான், சமுதாயத்தை ஒட்டிய நீதி தொடர்பான செயல் களுக்கு வன்முறையை கடை பிடிக்க மாட்டேன். ஆனால், அர சியலில், வன்முறைக்கு எதிரான எனது கொள்கையில் சிறிது மாற்றம் செய்து கொள்ள உள் ளேன். அரசியல் ஸ்திரத்தன்மை யற்ற நிலையில், நெல்சன் மண் டேலா தனது மனநிலையை மாற் றிக் கொண்டுள்ளார். வன்முறை யற்ற கொள்கைக்கு தந்தை போன்றவர் மகாத்மா காந்தி. அவர் கூட கோழைத்தனமா? வன்முறையா? என்கிற போது, கண்டிப்பாக, வன்முறையைத் தான் தேர்வு செய்வார். அரபு நாடுகளில் பெரிய அளவில் இணைய வசதி இருப்பதால், ஆட்சிக்கு எதிராக மக்கள் புரட் சியில் ஈடுபட்டுள்ளனர். இது போன்று மியான்மரில் ஏற்பட வழியில்லை. காரணம், மியான் மரில் இணைய வசதி இல்லை. உலக நாட்டு மக்களைப் போன்றே மியான்மர் மற்றும் டுனீஷியா நாட்டு மக்களும் சுதந்திரத்திற்காக காத் திருக்கின்றனர் என்றார்.

# தமிழிலும் "கூகுள்" சேவை




(வொஷிங்டன்)

உலகளவில் இணையத்தளங்கள் வாயிலாக கண நேரத்தில் தேவைப்படும் தகவல்களைத் தேடித்தரும் "கூகுள்" சேவை, இனி, தமிழ், தெலுங்கு, கன்னடம், குஜராத், பெங்காலி மொழி களிலும் கிடைக்கும். இதுகுறித்து, "கூகுள்" விஞ்ஞானி ஆசி வேணுகோபால் "கூகுள்" "ப்ளாக்"கில் தெரிவித்துள்ள தகவலில், "கூகுள்" சேவையை தமிழ், தெலுங்கு, கன்னடம், குஜராத், பெங்காலி மொழிகளில் வழங்குவதற்கான, மொழிமாற்றும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இந்தியா, பங்களாதேஷ் நாடுகளில் மட்டும், இந்த மொழிகளை 50 கோடி மக்கள் பேசுகின்றனர். "கடந்த, 2009ஆம் ஆண்டிலிருந்து "கூகுள்" சேவை, 11 மொழி களுக்கு மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தற்போதைய மொழி மாற்றங்களுடன் சேர்த்து எண்ணிக்கை, 63 ஆக அதிகரித் துள்ளது. ''கூகுள்''சேவையில் கிடைக்கும் இந்த மொழிகளில், தக வல்கள் விட்டுப் போயிருந்தால் அல்லது தவறு நேர்ந்திருந்தால் தகவல் கொடுக்கலாம்" என தெரி வித்துள்ளார்.

# ஜப்பானில் பாரிய நில நடுக்கம்; சுனாமி எச்சரிக்கையும் விடுப்பு




(டோக்கியோ)

ஜப்பானின் வடக்கு பசிபிக் பிராந்தியத்தில் 6.7 ரிக்டர் அளவில் நேற்று அதிகாலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் குறித்த தகவலை ஜப்பான் மற்றும் அமெரிக்க நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்தது.

நிலநடுக்கம் காரணமாக கடலோர நகரங்களான காமய்ஷி மற்றும் ஒபுனட்டோ பகுதிகளில் இருந்து 8 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங் களுக்கு வெளியேற்றப்பட்டனர். நிலநடுக்கத்தால் சுனாமி ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஒரு மணி நேரத்தின் பின் அந்த எச்சரிக்கை திரும்ப பெறப்பட்டது. நிலநடுக்கத்தால் ரயில் சேவை அந்தப் பகுதியில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. ஒரு மணி நேரத்திற்கு பின்னர் மீண்டும் இயங்கத் துவங்கியது. ஜப்பான் நேரப்படி நேற்றுக் காலை 7 மணிக்கும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ஜப்பான் தலைநகர் டோக்கியோவுக்கு வடகிழக்கே 53 கி.மீ தொலைவில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது.

# பதிவிறக்கப் பெட்டகம்

பேசுவது மனிதன் அல்ல, மொழி! அதாவது மனிதன் எதைப் பேசினாலும் அது மொழியின் ஒழுங்கமைவின்படியே அமையும். இதின்றி மனிதன் பேச முடியாது... இலக்கியம் சூனியத்தி லிருந்து பிறப்பதில்லை. முன்புள்ளவர்கள் எதை எழுதி வைத் துள்ளார்களோ அதன் விரிவாக்கம் மட்டுமே. படைப்பாளி எந்தக் கலாசாரம், மொழி அல்லது இலக்கிய மரபிலிருந்து ஊட்டம் பெற்றுள்ளாரோ, எவ்வளவுதான் அதற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினாலும், அதே மரபு மற்றும் காவிய இயலின் வரையறைக்குட்பட்டேதான் எழுதுவார். எந்தப் படைப்பும் தனது பண்பாடு மற்றும் இலக்கிய ஒழுங்கமைவுக்குப் புறம்பாக இன்றுவரை எழுதப்படவில்லை. எழுதப்படவும் முடியாது.

- ரோலான் பார்த்.

உலகத்தைக் கட்டமைக்கும் வழிவகையாக மொழி இருக்கிறது. இன்னொருபுறம் இந்த உலகின் இருப்பை சாத்தியப்படுத்துவதாகவும் மொழி செயற்படுகிறது. அப்படி செயற்படும்போது இந்த உலகத்துடன் உறவு கொள்வதற்கான உபகரணங்களையும் மொழிதான் மனிதர்களிடத்தில் தருகிறது. நாம் மொழியால் பிணைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை விடவும், நம்மைப் பிணைத்திருக்கும் சங்கிலிகளால்தான் நாம் அர்த்தப்படுகிறோம்.... மொழி ஒருவகையில் சிலந்தி வலை போல் உபயோகப்படுகிறது. நாம் எதை அறிய விரும்புகி றோமோ அதைப் பிடிப்பதற்காக அந்த வலையைப் பயன்படுத் துகிறோம். ஆனால் அந்த வலையில் நாம் விரும்பியதெல்லாம் வந்து மாட்டிக்கொண்டு விடுவதில்லை. இரை சிக்கிக் கொண்டதென நெருங்கிப் பார்க்கும்போது இரையாக நாமே இருப்பது தெரிந்து திடுக்கிடுகிறோம். வீரியம் மிக்க படைப்புகளில் பின்னப்பட்டிருக்கும் மொழி நம்மை வசீகரித்து உட்செரித்துக் கொள்வது இப்படித்தான்.

- நீட்சே.

மொழி என்பது வலி. அது நாம் பிறந்ததுமே நம்மை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. வ்ளர வளர, படிப்படியாக மொழியாலேயே குழந்தை கட்டமைக்கப்படுகிறது. வார்த்தைகள் தொடர்ந்து குறியீடுகளால், குழந்தையை மேலும் மேலும் வடிவமைக்கின்றன. தொடர்ந்து வார்த்தைகள் குழந்தையைச் செப்பனிட்டபடி இருக்கின்றன. நாம் வளர்ந்து ஆளான பிறகும் வார்த்தைகள் நம்மை ஆள்கின்றன.

- ழாக் லக்கான்.

மனிதர்களைத் தன் இயக்கத்தால் கட்டுப்படுத்துகிறது மனம். அது தன்னெழுச்சியோடு பொங்கி நிறையும் இச்சைகளாலும், சமூக வாழ்க்கை காலம் காலமாக உருவாக்கி தகவமைத்திருக் கும் மரபுணர்வுகளாலும் நெய்யப்பட்டிருக்கிறது.

- பாவண்ணன்.

மொழி மண் போல, சென்ற காலம் முழுக்க அதில் புதைந்து கிடக்கும். - யாரோ.

எனக்கும் மொழிக்குமான உறவை நுணுகிப் பார்க்கையில் என்னை ஒரு மொழிஅறிஞன் என்று சொல்ல முடியாது என்று படுகிறது. நாற்பது வருடங்களாக ஓய்வொழிவில்லாமல் இதில் ஈடுபட்டிருப்பதனால் வந்த குறைந்தபட்ச தேர்ச்சி மட்டுமே எனக்கு உள்ளது. தத்துவம் வரலாறு உள்பட நான் கற்கும் அனைத்தையுமே என் மொழியறிதலின் பகுதிகளாகவே உள்வாங்கிக் கொண்டிருக்கிறேன். நான் வாசிக்கும் அனைத் துமே எனக்கு மொழியனுபவங்கள்தான். பெரும்பாலான நூல் களை மொழிசார்ந்த மனப்பிம்பங்களாகவே நினைவில் வைத் திருக்கிறேன்.

யோசித்துப் பார்க்கையில் என்னுடைய ஒரே பலம் மொழியை தமிழை மட்டும் நான் அகமனச் சித்திரங்களாக மாற்றிக் கொள்ள முடிவதுதான். மொழியினூடாக கனவுகாண என்னால் முடிவதுதான். இந்த தனித்தன்மை காரணமாக பிற அனைத்துமே சராசாரிக்குக் கீழே குறுகி விட்டன. மொழி புழங்கும் பலநூறு வணிகத்தளங்களில் ஒரு சாதாரண கல்வி உடையவன் அளவுக்குக் கூட செயற்பட என்னால் முடியாது.

ஆகவேதான் சென்றகாலங்களில் இலக்கியவாதியை சமூகமே பேணும் முறை இருந்து வந்திருக்கிறது. அவன் மொழியால் கையும் காலும் பிணைக்கப்பட்ட பரிதாபகரமான ஆத்மா.

- ஜெயமோகன்.

சொற்களின் உதவியின்றி சிந்திப்பது மனித மூளைக்கு சாத்தியமே இல்லை. - ழாக் தெரிதா.

கொடுங்கோன்மையின் மூலாதாரங்கள் கொடுங்கோலர்களோ துப்பாக்கிகளோ கொடிய நிறுவனங்களோ அல்ல. கொடுங் கோன்மை என்பது கொடுங்கோன்மையின் மொழியிலிருந்தே தொடங்குகிறது. - அ. மார்க்ஸ்.

தேசியம், மொழிவெறி ஆகியவையெல்லாம், மனிதன் தன்னைத் தானே அழித்துக் கொள்ளுவதற்கு முன்னால் இறைவன் அவனுக்குப் பைத்தியம் பிடிக்கச் செய்திருப்பதன் அடையாளங்கள்.

- இந்திரா பார்த்தசாரதி.

**போ**ர்க்குற்றங்கள் உலகளாவிய ரீதியில் வெளிக்கொணரப்படுவது குமட்டலையும் மனச்சோர்வையும் ஏற்படுத்துகிறது. ஒருவர் தன்னை இலங்கையர் என்று சொல்ல வெடகப்படவேண்டியுள்ளது. செய்திக் குழுக்களின் ருவிற்றர் மற்றும் சமூக வலையமைப்புக்களில் கலந்துரையாடல்கள், ஏற்கெனவே தொலைக்காட்சியில் பார்த்தவற்றால் அருவருப்படைந்துள்ள உலகுக்கு எங்கள் உண்மை இயல்பை மேலும் படம் பிடித்துக்காட்டுகின்றன.

**மோதல்கள் இப்பொழுது உலகமயமாக்கப்பட்டு தொலைக் காட்சியிலும் வருகின்றன**

மோதல்கள் இப்போது உள்ளூர் விவகாரங்கள் அல்ல. அவை உலகமயமாக்கப்படுபவை. இணையத்தளம் இப்பொழுது எல்லோரையும் அதில் பங்குபற்றச் செய்கிறது. டிஜிற்றல் தொழில்நுட்பமும் வீடியோ பங்குபற்ற சிங்களவர்களால் தமிழர்சார்பு நாடாக அஞ்சப்பட்ட இந்தியா, இப்பொழுது அச்சுறுத்தலை ஒழிக்க, சிங்களவர்களுக்கு உதவியது. தமிழர்களைப் பாதுகாக்கப் பல சிங்களர் (படையினர்) உயிர்த் தியாகம் செய்ததாக அரசாங்கம் சொல்வதும் உண்மைதான்.

1983 இல் நடந்தவை கொடூரங்களே எனத் துணிந்த புலம்பெயர் தமிழர்களுக்குப் பல அமைப்புக்களை ஆதரிக்கும் வாய்ப்பு இருந்தது. ஆனால், அவற்றுள் ஈவிரக்கமற்ற ஓர் அமைப்பே தம் இலக்குகளை அடைய உதவும் என அவர்கள் கருதினர். அந்த அமைப்புக்குள் இருந்த அதிகார துஷ்பிரயோகங்களை அவர்கள் கண்டுகொள்ளவில்லை. அவர்கள் பேரொலி உண்டாக்கிய சாதனைகளைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். பணத்திலே குறியான என்ற உணர்வு தமிழரைத் தமது குற்றச்செயல்களைக் கண்டுகொள்ளாதிருக்க உதவியது. அது ஒருவருடைய மனத்தில் உண்டாகும் வலிக்கு ஒத்தடம் கொடுக்கும். ஒருவர் பலியானவர் ஆனால், மற்றவர்கள் மீது பழியைப் போடுவது வசதியாக இருக்கும்.

**படபடக்கும் தற்குறிகள்**

மேல்நாடுகளைப் பற்றி நாம் குழப்பத்தில் இருக்கிறோம். அவர்கள் பார்வையில் சர்வாதிகாரிகள் மட்டுமே தற்குறிகள். உண்மையில் மோசமானதொரு சர்வாதிகாரியே தன் மக்களுக்கும் மற்றையோருக்கும் கெடுதி செய்வான். ஆனால், இந்தத் தீவின் மக்களைப் பொறுத்தவரை, அவர்களுடைய நடத்தை சற்று வித்தியாசமானது. கொஞ்சக் காலத்துக்கு முன்புதான் தங்கள் கொல்லைப் புறத்திலேயே சிங்களவர் ஆயுதப் படையினரின் கொடூரங்களை தனத்தை உலகுக்கு நிரூபிககவேண்டிய தேவை அவர்களுக்கில்லை.

அவர்களுடைய பிள்ளைகள் நல்ல பலகலைக்கழகங்கள் புகுந்து பிரகாசிக்கிறார்கள். அவர்கள் நல்ல தொழில் புரிகிறார்கள். அவர்கள் குடும்பங்கள் சனல் - 4 இல் தோன்றா. அவர்கள் தங்களுக்கு வசதி வாய்ப்புக்களைத் தேடிக் கொண்டார்கள். மன்செஸ்டர் யுனைற்றெட் அல்லது பொஸ்ரன் றெட் சொக்ஸ் போன்ற விளையாட்டுக் கழகங்கள் அவர்களை உசுப்பாத காரணத்தால் மட்டுமே புலிகளை ஆதரித்தவர்கள். இப்போ அவர்கள் செய்தது சரியென்று சனல் -4 நிரூபிக்கிறது. சிங்களவர்களோடு சீவிக்க முடியாது. அவர்கள் மனிதர்களே அல்ல, அவர்களை மீட்க முடியாது.

**உலகில் எமக்குள்ள இடம்**

நாம் இப்பொழுது பூகோள மயப்பட்ட சூழ்நிலையில் வாழ்கிறோம்.

# நாங்கள் நியண்டர்தல் மனிதரைவிட ஓர் அடிதான் முன்னே இருக்கிறோம்



லும் எல்லை கடந்து மனித அனுபவங்களில் எம்மை பங்காளிகளாக்குகின்றன. சிங்கள ஆயுதப் படையின் போர்க்குற்றங்கள் எங்கள் ஞாபகச் சுவடுகளில் உள்ள வேறெந்தக் கொடூரங்களுக்கும் குறைந்ததல்ல என்று வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகின்றன.

பல தமிழர்களைப் பொறுத்தவரை இது வெளிக்கொணரப்பட்டது மகிழச்சியளிக்கின்றது. ஆனால், இதில் திருப்தியடைய ஒன்றுமில்லை. உலகின் 99 வீத மக்களுக்கு சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் வித்தியாசம் தெரியாது. நாம் இருசாராரும் ஒரே தோற்றம் கொண்டவர்கள் என்பது மட்டுமல்ல, எங்கள் நடத்தைக் கோலங்களும் ஒரே மாதிரியானவையே.

**புலம் பெயர்ந்த தமிழ் மேட்டுக் குடியினருக்கும் இதில் பங்குண்டு**

அரசாங்கத்தின் வெற்றியையடுத்து வந்த வெகுஜனக் கொண்டாட்டங்களை உலகம் பார்த்தது. ஆனால், அதற்கு முன் நடந்த சம்பவங்களைக் குறிப்பாக, முழுத் தமிழரின் ஆதரவோடு விடுதலைப் புலிகள் செய்த கொடுமைகளை உலகம் பார்க்கவில்லை. அந்த அவலச் சூழலுக்கு வெளியே இருந்த தமிழ்ச் சமூகமும் மக்களை இரு ஆட்கொல்லிச் சக்திகளுக்கிடையே சிக்க வைத்தமைக்கு ஓரளவு காரணம் என்பதே என் வாதம். இதை விளக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

சர்வதேச சமூகம் செயற்படாதிருந்தமைக்கான ஒரே முக்கிய காரணம், தன் மக்களுக்கும் சிங்களவர்களுக்கும் எதிராகப் போர்க்குற்றங்கள் செய்த நீண்ட வரலாற்றையுடைய ஒரு பாசிஸ அமைப்பை இந்தப் போர் அழிக்கப்போகிறது என்பதாகும்.

இந்தியா செயற்படாதிருந்த காரணம், இலங்கையிலிருந்த மெத்தப் படித்த தமிழர்கள் தமது 'இலட்சியத்துக்காக' தனது பிரதம மந்திரியைக் கொல்வது தக்கது எனக் கருதியதாலாகும்.

இந்தியப் பிரதமரைப் படுகொலை செய்தமை முழு மூடத்தனம் என்று கருதாத யாழ்ப்பாணத்தான் யாருமில்லை. முஸ்லிம் மற்றும் சிங்கள சிவிலியன்களைத் தமிழர் கொல்வது பற்றிச் சொல்வதற்கு ஏதுமில்லாத யாழ்ப்பாணத்தார் இன்னும் அரிதாய்ப் போயினர். விடுதலைப் புலிகளால் ஒடுக்கப்பட்ட தமிழ் அரசியல் தலைமையின் எச்சங்கள், சிங்களவர் செய்யும் கொடுமைகள் பற்றியே சுட்டிக்காட்டும் நிலையில் இருந்தனர். யாழ்ப்பாணத்தான் விடுதலைப் புலிகளின் பெறுமதியைக் கண்டான். ஈற்றில் ஐக்கிய தேசியக் கட்சியால் முன்னெடுக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட சமாதானமே புலிகளுக்குள் வெடிப்பை உண்டு பண்ணியதே தவிர, அதற்கு உரிமை கோரும் பிறர் முயற்சிகளல்ல.

**வழமையாக, கண்டனத்துக் காளாகும் சிங்களவர்**

பாடசாலைகளில் தமது நடத்தைக்காக ஆசிரியர்களால் கண்டிக்கப்படும் பிள்ளைகளை நீங்கள் கண்டிருப்பீர்கள். சிங்கள வரலாறு அவர்களுக்கு உதவாது. ஏற்றுக் கொள்ள முடியாத நடத்தைக்காக இந்தியா விலிருந்து நாடுகடத்தப்பட்ட விஜயன் இலங்கையில் இறங்கி அதே நடத்தையைத் தொடர்கிறான்.

இது எவ்வித பச்சாத்தாபமுமின்றி மகாவம்சத்தில் பதியப்பட்டுள்ளது. சமகால எழுத்தாளர்கள் பலர் விட்டுச் சென்ற இது போன்ற சாட்சியங்கள் மேலும் பல உள. ஆனால், பாடசாலையில் எங்களுக்குக் கற்பிக்கப்பட்ட றொபேட் நொக்ஸ் எழுதிய கூற்றுக்கள் சில நேரானவை.

இவை தவிர, சிங்களவர்கள் என்போர், தவறாகப புரிந்துகொள்ளப்பட்ட, புலிப் பயங்கரவாதிகளால் கண்டனத்துக்குள்ளாகி, இன்று தப்பமுடியாது உலகளாவிய ஊடக விசாரணைக்குள்ளாகியிருக்கும் உளவியல் நெருக்குதலுக்காளானதோர் இனம்.

நேர்ந்துள்ள சேதம் பாரியது. மாற்ற முடியாதது. இப்பொழுதிலிருந்து, பலியானோர் என்ற உணர்வு மாத்திரமே சிங்களவர்களுக்கு ஆறுதலளிக்கக் கூடியது. பலியானோர் அனுபவித்தனர். ஆனால் அதே மக்களால் இன்னொரு மொழிபேசும் தம் நாட்டவர் மீது நிகழ்த்தப்பட்ட அவலப் பெருங்காட்சியைக் கொண்டாட முடிகிறது.

ஒரே குழப்பமாயிருக்கிறதல்லவா? நியண்டர்தல் மனிதர், இன்னமும் உலாவுகிறார்கள் என்று மேல்நாட்டவர் நம்ப மறுக்கின்றனர். ஆனால், எந்த ப்ளொக்குடனோ ருவிற்றருடனோ இணைந்தீர்களாயின், அதைவிடப் பெரிய பயத்தை அது ஏற்படுத்தும். நியெண்டர்தல் மனிதர் அவர்கள் மத்தியிலேயே உள்ளனர். அவர்கள் தொடர்வண்டிகளில் பயணம் செய்கிறார்கள், அவர்களுடைய கொம்பனிகளில வேலை செய்கிறார்கள். ருவிற்றர் செய்கிறார்கள், சராசரி மனிதருக்கும் குறைந்த மனோ ஆற்றல்களை வெளிக்காட்டிக் குரோதத்தைக் கக்குகிறார்கள்.

**உண்மையான வெற்றியாளர்கள்**

விடுதலைப் புலிகளை ஆதரித்த புலம்பெயர் தமிழர்களே உண்மையான வெற்றியாளர்கள். 1983 இல் தாங்கள் சிங்களவர்களிடம் அனுபவித்த மிருகத் எமது பண்டைய, தற்போதைய நாகரிகம் பற்றி எங்களுடைய மனங்களில் இருக்கும் புனைவுகளை அது அழித்து விடும்.

மற்றையவற்றிலிருந்து வேறான மேலான எங்கள் தனித்துவமான பணபாடு என்று நாம் கருதிய ஒன்றைப் பேணவே போர் நடந்தது. இப்பொழுதாவது மந்த புத்தியுள்ளவர்களைவிட, மற்றெல்லோருக்கும் இக் கொள்கை தவறு என்று புரிந்திருக்கும். உண்மையில் தமிழரும், சிங்களவரும் உலகம் வெறுத்தொதுக்கும் நடத்தைக் கோலங்களை விட்டு ஏற்புடைய கோலங்களைக் கைககொள்ளவேண்டும்.

இத்தகையதொரு வெளிப்பாடு நன்மையே செய்யும் - அது ஒரு பக்கத்திலிருந்து மட்டும் வருவதாயில்லாவிட்டால். தர்க்க ரீதியில் சிந்திக்காமல், யதார்த்தத்தை நிராகரித்து, எம்மையே ஏமாற்றுவதில் நாம் நியண்டர்தல்களை விட ஓர் அடி முன்னே நிற்கிறோம் என்ற ஞானோதயம் ஒருவேளை எமக்கு ஏற்படலாம்.

- **கிருலப்பனை ஆனந்தசிவம்**

# தடுக்கி விழுந்த பேராசிரியர் சிற்றம்பலம்!

தமிழரசுக் கட்சியின் உப தலைவரும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் விரிவுரையாளருமான பேராசிரியர் எஸ்.கே.சிற்றம்பலம் அவர்களை, பி.பி.சி தமிழ்ச்சேவை 2011 மே 18 ஆம் திகதி செவ்வி கண்டது. பி.பி.சி. சார்பில் ஒரு முக்கியமான கேள்வியாக "தமிழரசுக் கட்சியின் இனப்பிரச்சினை சம்பந்தமான கொள்கை" என்ன எனக் கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த சிற்றம்பலம், வழமையாக கூட்டமைப்பினர் சொல்லும், "தமிழர் தேசியம், சுயநிர்ணய உரிமை, தன்னாட்சி" என்று கூறித் தப்பித்துக்கொள்ளப் பார்த்தார். ஆனால் அவரது மொட்டையான பதிலால் திருப்தியடையாத பி.பி.சி. செய்தியாளர், "உங்கள் கொள்கைகள் நடைமுறையில் எவ்வாறு இருக்கும்" என்ற அடிப்படையில் மீண்டும் ஒரு கேள்வியைக் கேட்டார்.

அதற்குப் பதிலளித்த சிற்றம்பலம், 'பூரண சமஷ்டி முறையே தமது கொள்கை' என்றும், அதன்படி 'இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பூரண சமஷ்டி வழங்கப்பட வேண்டும்' எனவும், 'மத்தியில் தமிழ் மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்' எனவும் விளக்கமளித்தார்.

அதைத் தொடர்ந்து, பி.பி.சி. செய்தியாளர் இன்னொரு கேள்வியைத் தொடுத்தார். 'தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமின்றி, வேறு பல தமிழ் கட்சிகளும் இருப்பதால், இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக அவைகளுடனும் அரசாங்கம் பேச வேண்டும் தானே?' எனக் கேட்டார்.

இந்தக் கேள்வியிலுள்ள நியாயத்தை மறுக்க முடியாத சிற்றம்பலம், 'அதுசரிதான்' என்று ஏற்றுக்கொண்ட போதிலும், தமிழர் சமூகத்தில் ஜனநாயகத்தையும், பன்மைத்துவத்தையும் ஏற்றுக் கொள்ளாத புலிகளின் பாணியில், 'ஆனால் அக்கட்சிகள் அரசாங்கத்துடன் சேர்ந்தல்லவோ இருக்கின்றன' என தனது மறுப்பையும் வெளியிட்டார்.

சிற்றம்பலத்தின் கருத்தின்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் அரச எதிர்ப்பு அரசியலையே முன்னெடுக்க வுள்ளமை தெளிவாகின்றது. இவ்வளவு காலமும் அரச எதிர்ப்பு அரசியலை நடாத்தி தமிழ் மக்களுக்கு அழிவைத் தவிர வேறு எதையும் பெற்றுத்தராத இந்த இனவாத பிற்போக்குத் தமிழ்த் தலைமைகள், தொடர்ந்தும் அந்த அழிவுகரமான பாதையில் பயணிக்க உள்ளது புலனாகின்றது.

இதேவேளையில் சிற்றம்பலம் தமது கொள்கைகளில் ஒன்றாக, மத்தியில் தமிழ் மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வேண்டுமென்கிறார். அதன் அர்த்தம் மத்திய அரசாங்கத்தில் பங்கு தானே? 72 வீதம் சிங்கள மக்கள் வாழும் நாட்டில், இயல்பாகவே அவர்கள்தானே ஆட்சியின் பிரதான பங்குதாரர்கள்? அந்தச் சூழ்நிலையில் அரசில் தமிழர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் என்பது, ஆட்சியில் பங்கு அல்லது அரசாங்கத்தை ஆதரிப்பது தானே? அப்படியானால் அது அரசு ஆதரவு இல்லையா?

சிற்றம்பலம் தமது கட்சி மட்டும் அரசை ஆதரிக்கலாம் மற்றவர்கள் ஆதரிக்கக்கூடாது என்ற 'சித்தாந்தத்தை'க் கொண்டுள்ளாரா? அல்லது பொது சன ஐக்கிய முன்னணி ஆட்சியை ஆதரிக்க மாட்டோம், 1965 இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் பங்குதாரர்களாக இருந்தது போல, அந்தக் கட்சி ஆட்சியுடன்தான் (வர்க்க) கூட்டு என்கிறாரா?

பேராசிரியர் சிற்றம்பலத்தை தடுக்கி விழுத்துவதற்காக இந்தக் கேள்விகளை நாம் அவரிடம் கேட்கவில்லை. பி.பி.சி. செய்தியாளரின் கேளவியால் தடுக்கி விழுந்துள்ள சிற்றம்பலத்தை, கை தூக்கிவிடவே இந்தக் கேள்விகள்!



– **விடாக்கண்டன்**

# வேகமாகப் பரவுகிறது வைரஸ் காய்ச்சல் மருத்துவ அதிகாரிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

நாடெங்கிலும் பிள்ளைகள் மத்தியில் வைரஸ் காய்ச்சல் பரவி வருகின்றது. பிள்ளைகளுக்கு தகுதி வாய்ந்த வைத்தியரினால் வழங்கப்படும் சிகிச்சை மூன்று நாட்களின் பின்னரும் பலனளிக்காதுவிடின் பெற்றோர்கள் வைத்தியசாலையை நாடவேண்டு மென லேடிரிஜ்வே பணிப்பாளர் வைத்தியர் ரட்ணசிறி ஹேவகே தெரிவித்துள்ளார்.

காய்ச்சல் காரணமாக கூடிய விரைவில் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வைத்தியசாலை வார்ட்டுகளுடன் நிரம்பியுள்ளதாக அவர் கூறினார்.

இந்த வைரஸ் காய்ச்சலுக்கு சாதாரண அறிகுறியாக தாகம், வயிற்றுவலி, வாந்திபேதி போன்ற குணங்குறிகள் காணப்படுகின்றன.

தற்போது டெங்குநோய்த் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்ற இந்த வேளையில், வைரஸ் காய்ச்சலா அல்லது டெங்கு நோயா என்று குழப்பம் ஏற்பட்டுள்ள நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

வைத்திய ஆலோசனை பெற்றுக்கொள்வது சிறந்தது. வைத்திய ஆலோசனை இல்லாமல் வழங்கப்படும் சில மருந்துகள் ஆபத்தாக முடியுமெனவும் குறிப்பிட்டார்.

லேடிரிஜ்வே வைத்தியசாலையில் நாளொன்றுக்கு 1,500 குழந்தைகள் சிகிச்சை பெற்றுக்கொள்வதாக எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

வெளிநோயாளர் பிரிவில் சுமார் 1000 நோயாளர்களும் 200 பேர் மேலதிக சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனரெனவும் அவர் கூறினார்.

# தப்பியோடும் கைதிகள் பட்டியல் நீளுகிறது



(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளிலிருந்து கடந்த வருடம் 251 கைதிகள் தப்பிச் சென்றுள்ளதாக இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சிறைச்சாலைகள் திணைக்களத்தில் கடந்த வருட நடவடிக்கைகள் சம்பந்தமான அறிக்கையிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் அதிகமான தொகையாக 43 பேர் வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்தும் 26 பேர் பல்லேகல சிறைச்சாலையிலிருந்தும் 21 பேர் மாகர சிறைச்சாலையிலிருந்தும் 14 பேர் போகம்பர சிறைச்சாலையிலிருந்தும் தப்பிச்சென்றுள்ளனர்.

கடந்த வருடம் 15839 கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டும், 12861 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் சிறைச்சாலைகளை சீர்திருத்துவதற்கு சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெங்கு நோய்த் தடுப்பு; வெளிநாட்டு நிபுணர்கள் களத்தில்

(கொழும்பு)

டெங்கு நோய்த் தடுப்பு நடவடிக்கையினைத் துரிதப்படுத்துவதற்காக தாய்லாந்திலிருந்து மருத்துவ நிபுணர்கள் குழுவொன்று கொழும்பு வந்துள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தாய்லாந்து அலுவலகத்திலுள்ள ஒத்துழைப்பு மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் சிறிபன் கல்யாண்ருஜ் தலைமையில் இம் மருத்துவ நிபுணர்கள் குழு கொழும்புக்கு வருகை தந்துள்ளதாக சுகாதார அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இவர்கள் மூலம் டெங்கு நோய்க்கு சிகிச்சை அளிப்பது தொடர்பாக அரச வைத்திய சாலைகளில் கடமையாற்றும் சிறுவர் மருத்துவம் மற்றும் நரம்பியல் சிகிச்சை நிபுணர்களுக்கு விசேட பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன.

இம்மருத்துவ நிபுணர்கள் குழுவினர் கொழும்பு லேடிரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் கடமையாற்றும் சிறுவர் மருத்துவம் மற்றும் நரம்பியல் சிகிச்சை நிபுணர்களுக்கு நேற்றுமுன்தினம் இவ்விசேட பயிற்சியை வழங்கினர்.

இக்குழுவினர் நாட்டிலுள்ள 75 பிரதான வைத்தியசாலைகளில் விசேட பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

## அதிகரிக்கிறது கசிப்பு உற்பத்தி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சட்டவிரோத மது தயாரிப்பு அதிகரித்து வருகின்றது என தெரிவித்துள்ள பொலிஸார், அதனைக் கட்டுப்படுத்த சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

உள்ளூரில் மது தயாரிப்பால் குறைந்த செலவில் நல்ல வருமானம் கிடைப்பதினால் பலரும் இந்த தொழிலில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்தப் பாவனை வன்னிப் பிரதேசத்தில் உள்ள மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

## பஸ் கட்டணம் உயர்கிறது

(கொழும்பு)

தனியார் பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டதையடுத்து இலங்கைப் போக்குவரத்து பஸ் கட்டணமும் 7.6 சதவீதத்தால் அதிகரிக்கப்படுவதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் ஆகக் குறைந்த பஸ் கட்டணம் 7 ரூபாவாகவும் ஏனைய பஸ் கட்டணங்கள் 7.6 சதவீதத்தாலும் அதிகரிக்கப்படவுள்ளன.

## வடக்கின்...

சார்ந்த விடயங்கள் கடற்தொழிலாளர் பிரதிநிதிகளினால் முன்வைக்கப்படவுள்ளதுடன், மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது குறித்தும் ஆராயப்படவுள்ளது.

மேலும், இக்கருத்தரங்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், உதவி அரச அதிபர்கள், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர்கள், மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர்கள் முதலானவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் மேற்கொண்டுள்ளனர். (பா)

# காரைநகர் நீலன்காடு மக்கள் மீள்குடியமர அனுமதிக்க கோரிக்கை

(யாழ்.நிருபர்)

காரைநகர் உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள நீலன்காடு, பலுகாடு, இராசாவின் தோட்டம் ஆகிய பகுதிகள் விடுவிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படவேண்டுமென இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

1991 இடப்பெயர்வின் பின்னர் தாங்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பிரதேசங்கள் சுமார் 20 வருடங்களுக்கும் மேலாக கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும், வலிகாமம் வடக்கில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்படுவது போன்று எமது நிலங்களில் நாமும் மீளக்குடியமர அனுமதிக்கப்படவேண்டுமென இவர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் காரைநகரில் நடைபெற்ற பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இவ் விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (10)

# போலி வாகன உரிமம்; ஆறு பேர் கைது

(கொழும்பு)

மோட்டார் வாகனங்களுக்கு போலி உரிமைப்பத்திரம் விற்பனை செய்து வந்த ஆறு சந்தேக நபர்களை பொலிஸ் குற்ற விசாரணை பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள அதிகாரி ஒருவரும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பணத்தினை பெற்றுக்கொண்டு போலி சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வாகன அனுமதிப்பத்திரம் என்பவற்றை நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ளவர்களுக்கும் விநியோகித்துள்ளனர்.

இவ்வாறு இவர்களால் போலி ஆவணம் வழங்கப்பட்ட ஒருசில வாகனங்கள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊரியானில் விவசாய மேம்பாடு; அடுத்த வாரம் விசேட கூட்டம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி ஊரியான் பகுதி விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகள் குறித்து ஆராயும் பொதுக்கூட்டம் வரும் 29 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளதாக ஊரியான் கமக்கார அமைப்புத் தலைவர் கே.சிவப்பிரகாசம் அறிவித்துள்ளார்.

ஊரியான் அன்சார் முன்பள்ளியில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் வங்கிக்கடன் நடவடிக்கைகள், சிறுபோக நீர் விநியோக நடவடிக்கைகள் உட்பட விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளன.


இக்கூட்டத்தில் கமக்கார அமைப்பின் எல்லைக்குட்பட்ட விவசாயிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (110)

## தீர்வுக்கான பேச்சு....

வைக்கப்பட்ட விடயங்களில் அரசின் நிலைப்பாடு குறித்து நேற்றைய பேச்சுக்களில் விரிவாக ஆராயப்பட்டது.

இவ்விடயம் குறித்து அரச தரப்பிலிருந்து சாதகமான பதிலை கூட்டமைப்பு நேற்றைய பேச்சுக்களின் போது எதிர்பார்த்தது. குறிப்பிட்ட சில அம்சங்களுக்கு மட்டும் அரச தரப்பிலிருந்து நேற்று பதில் கிடைத்ததாகவும், ஏனைய விடயங்களுக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி மீண்டும் பேச்சு தொடரும் போது அரசின் பதில் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நேற்றைய பேச்சுக்களின் இறுதியில் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இப்பேச்சுக்களின் இறுதியில் அரச தரப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.




## அரசியல் தீர்வு....

கலந்துகொண்டனர். ஈ.பி.டி.பி தரப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மற்றும் ராஜ்குமார், தயானந்தா ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ளதன்படி 13 ஆவது திருத்தத்தின் படியான அதிகாரங்களை முறையாக நடைமுறைப் படுத்த வேண்டுமெனவும், அதற்கு சமகாலத்தில் 13 ஆவது திருத்தத்தை செழுமைப்படுத்தவும் அதற்கு மேலதிகமானவற்றைச் சேர்ப்பதற்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைத்து அதன் மூலம் பெறுபேறுகளை அடையலாம் எனவும் ஈ.பி.டி.பி தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதானது எதிர்த்தரப்புக்களையும் தீர்வு நடைமுறையில் இணைத்துக்கொண்டு தடைகளைக் களைந்து தீர்வைக் கொண்டுவர ஏதுவாக இருக்கும் என விளக்கிச் சொல்லப்பட்டது.

நடைமுறைச் சாத்தியமான இந்த வழிமுறையை நிராகரிப்பவர்கள் தொடர்ந்தும் தீர்வை இழுத்தடித்து எதிர்ப்பரசியல் செய்வதற்கும், பிரச்சினையை தீர்ப்பதற்கு விருப்பம் இல்லாததையுமே காட்டிக் கொள்கிறார்கள் என்பதையும் தங்கள் கலந்துரையாடலில் ஈ.பி.டி.பியினர் முன்வைத்தனர்.

தீர்வு முயற்சியை குழப்பி இழுத்தடிப்பதற்கும், அதுவரை மக்களுக்கு வாழ்வாதாரங்களையும் கிடைக்க விடாமல் தமிழ் மக்களை அரச எதிர்ப்புணர்வில் தொடர்ந்தும் வைத்திருக்க விரும்பும் கூட்டமைப்பின் நோக்கத்தை புரிந்துகொண்டு அரசாங்கம் செயற்பட வேண்டுமென ஈ.பி.டி.பி குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# அனைத்து விவசாய முயற்சிக்கும் உர மானியத்திட்டம் அமுல்

## ஜனாதிபதி மகிந்த அறிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் உள்ள அனைத்து விவசாய முயற்சிகளுக்கும் மானிய அடிப்படையில் உரம் வழங்கும் திட்டத்தை அரசு அமுல்ப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேற்படி மானியம் தொடர்பாக விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தும் கூட்டம் நேற்று முற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மகிந்த சிந்தனையின் எதிர்கால திட்டத்தின்படி தேயிலை, தென்னை, இறப்பர், மரக்கறி மற்றும் பழவகை ஆகியவற்றுக்கு மானிய முறையில் உரங்களை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியுடன் சந்திப்பு

தெற்காசிய வலய ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாடுகள் கூட்டாக இலங்கைக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டுமென புதிய செயலாளர் நாயகம் பதிமத்தியானா சயீட் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் அலரிமாளிகையில் சந்தித்து கலந்துரையாடிய சந்தர்ப்பத்திலேயே அவர் இக் கருத்தினை வெளியிட்டுள்ளார். சார்க் அமைப்பின் நல மேம்பாட்டிற்காக கடந்த காலங்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட நடவடிக்கைகளை புதிய செயலாளர் நாயகம் இதன்போது பாராட்டியதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிபபிடப்பட்டுள்ளது. சார்க் கலாசார நிலையத்தை கொழும்பில் நிறுவுவதற்கு இலங்கை வழங்கிய பங்களிப்பு மகத்தானது என்று அவர் புகழாரம் சூடியதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# யுத்த காலத்தில் காணாமல் போனோர்

# மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

வடக்கு, கிழக்குப் பகுதியில் யுதகாலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைகளுக்கென தனியான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக ஆணைக் குழுவின் செயலாளர் நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் காணாமல் போனவர்கள் குறித்து முதலில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கென நியமிக்கப்பட்டுள்ள குழுவினருக்கு விசாரணைகளை முன்னெடுப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளதாகவும், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் செயலாளர் மேலும் கூறியுள்ளார்

## மணியம் தோட்டத்திற்கு மின்சாரம் கிடைப்பது எப்போது?

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணியம் தோட்டத்திற்கு மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதியில் மீளக்குடியமர்ந்து வரும் மக்கள் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தருவதோடு மின்சார வசதிகளையும் ஏற்படுத் தித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரவு வேளையில் இப்பகுதி இருளில் மூழ்கிக் காணப்படுவதோடு மக்கள் போக்குவரத்துச் செய்வதிலும் சிரமப்பட்டு வருகின்றனர். (வி)

## காலாவதியான பொருட்கள் விற்பனை தென்மராட்சியில் திடீர் சோதனை

(காங்கேசன்துறை)

சாவகச்சேரி நகரப் பகுதியில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நேற்று மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையில் காலாவதியான பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த நான்கு வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் இவர்களை சாவகச்சேரி நீதிமன்றில் நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா முன்னிலையில் முற்படுத்திய போது அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இதனை அடுத்து தலா பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். (11)

# இலங்கை - இந்திய உறவில் தமிழகம் தலையிட முடியாது

## கடும் தொனியில் பேசுகிறார் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

இந்திய அரசியலமைப்பிற்கிணங்க மாநில அரசாங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை மீறி தமிழ் நாட்டு அரசாங்கம் மத்திய அரசுக்கு அழுத்தங்களையோ சிபாரிசுகளையோ வழங்க முடியாதென பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் தமிழக மாநில அரசாங்கத்துடன் தொடர்ந்தும் நல்லுறவைப் பேணும் என குறிப்பிட்ட அமைச்சர், அண்மையில் நடைபெற்ற தேர்தலில் தமிழக முதலமைச்சராக செல்வி ஜெயலலிதா பதவியேற்றபோது தாம் இலங்கை அரசின் சார்பில் அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்ததாகவும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கம் மத்திய அரசாங்கத் துடனேயே [illegible]கிய தொடர்புகளைக் கொண்டுள்ளது. அதுபற்றிய தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தமிழ் நாட்டுக்கு க்கிடையாது. தமிழ் நாடு மாநில அரசாங்கத்துடன் இலங்கை சம்பந்தப்பட்ட பல்வேறு பேச்சு வார்த்தைகளை எதிர்காலத்தில் மேற்கொள்வோம். அதில் எவ்வித பிரச்சினையுமில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## யாழ் - மட்டக்களப்பு துரித பேருந்து சேவை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு ஊடாக அக்கரைப்பற்று வரையான இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவையில், பயணிகளின் நன்மைகருதி சேவையில் நேர மாற்றம் இன்று முதல் செய்யப்பட்டுள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி, மட்டக்களப்பு ஊடாக அக்கரைப்பற்று வரையான பேருந்து சேவை யாழ். பேருந்துநிலையத்திலிருந்து தினமும் மாலை 7.30மணிக்குப் புறப்பட்டு மட்டக்களப்பு ஊடாக அக்கரைப்பற்று வரையும் செயலாற்றப்படுவதுடன், அக்கரைப் பற்றுப் பேருந்து நிலையத்திலிருந்து மாலை 6.00மணிக்குப் புறப்பட்டு மட்டக்களப்பு ஊடாக யாழ் சாலையை வந்தடையும்.

இதேவேளை, பேருந்துகளிற்கான ஆசனப் பதிவுகளை பயணிகள் யாழ்.மத்திய பேருந்து நிலையம் மற்றும் அக்கரைப் பற்று பேருந்து நிலையத்திலும் மேற்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முப்படைத் தலைமையகம் கட்டுமானத்திற்கு 20 பில்லியன்

(கொழும்பு)

பத்தரமுல்ல அக்குரேகொட பகுதியில் பாதுகாப்பு தலைமையக கட்டுமான பணிக்காக 20 பில்லியன் ரூபா துணை வரவு செலவு திட்டம் ஒன்றினை பிரதமர் டி.எம்.ஜயரட்ன நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இராணுவ, விமானப் படை மற்றும் கடற்படை தலைமையகங்கள் சேர்ந்து இந்த பாதுகாப்பு தலைமையகம் காணப்படும்.

இந்நிலையில் அமைச்சரவை அங்கீகாரத்தின்படி காலிமுகத்திடல் உள்ள பாதுகாப்பு அமைச்சு அமைந்துள்ள இடத்தினை வெளிநாட்டு நிறுவனங்களின் செயற்திட்டத்துக்கு வழங்குவதன் மூலம் இலங்கைக்கு 1000 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தகவல் அறியும் உரிமை

பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரய பாராளுமன்றத்தில் சமர்பித்த தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை மசோதா நிராகரிக்கப்பட்டபோதும் அது தொடர்பான சட்டவிதிகள் தொடர்பில் அரசாங்கம் பல கலந்துரையாடல்களை தொடர்ந்து நடாத்தி வருகின்றது. அரசாங்கம் வெகு விரைவில் இந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சர் அனுர பிரயதர்சன யாப்பா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும், இலங்கையில் ஊடகச் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்களை அறிந்துகொள்ளும் உரிமைகளுக்கு எதிராக அரசு எவ்விதத்திலும் தடைவிதிக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

## நாடு முழுவதும் அதிக உஷ்ணம்

நாடு முழுவதும் நேற்று அதிகூடிய உஷ்ணமான காலநிலை நிலவியதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது. இதன் காரணமாக நாட்டின் கீழ் வளிமண்டலத்தில் நீராவியின் அளவு அதிகரித்திருந்ததாக திணைக்களத்தின் கடமைநேர வானிலை நிபுணர் தமயந்தி இந்தி கெடிய ஹேவாகே குறிப்பிட்டார்.

மேல், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சில பகுதிகளில் ஓரளவு மழை பெய்யக்கூடுமென கடமைநேர வானிலை விசேட நிபுணர் தெரிவித்தார்.

எனினும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் மழை பெய்யக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படவில்லை என வளிமண்டல வியல் திணைக்களம் சுட்டிக்காட்டுகிறது.

கீழ் வளிமண்டலத்தில் நீராவியின் அளவு அதிகரித்துள்ளமையினால் காற்றின் வேகம் குறைவடைந்துள்ளதாகவும் இதன் காரணமாக அதிகளவு வியர்வை ஏற்டும் என்றும் வானிலை நிபுணர் கூறுகின்றார்.

வானத்தில் முகில்களின் அளவும் குறைவாக காணப்படுவதால் சூரியன் உச்சத்தில் காணப்படும் என அவர் குறிப்பிட்டார். எனினும் பெரும்பாலான இடங்களில் சீரான காலநிலை நிலவுமென தமயந்தி இந்திகெடிய ஹேவாகே மேலும் தெரிவித்தார்.

## தீவகக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் ஊடுருவல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும் தீவுப்பகுதிக் கடற்பரப்பில் அது தொடர்வதாக அப்பகுதி மீனவர்களினால் தம்மிடம் முறையிடப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்தொழில் நீதியல்வளத் திணைக்களப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

கிழமை நாட்களில் திங்கள், புதன், சனி ஆகிய மூன்று தினங்களும் இந்திய மீன்பிடி இழுவைப்படகுகள் குறித்த கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

வடமராட்சிக் கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்டுவரும தீவிர கண்காணிப்பு நடவடிக்கை காரணமாக அங்கு இந்திய மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கைகள் தடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், அதனைப் போன்று தீவுப்பகுதிக் கடற்பரப்பிற்குள் எல்லை மீறிவரும் இந்திய மீனவர்களது நடவடிக்கையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் இவ்விடயம் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் பேசி அதனைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (பா)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூன் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.